1. மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் புதிதாக உருவாகியுள்ள குடியிருப்புகள் மற்றும் தெருக்களுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது.
2. 100% சதவீத அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அனைத்து குக்கிராமங்களிலும் ஏற்படுத்த, தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைப்பது.

ஒவ்வொரு குக்கிராமத்தையும் ஓர் சமூக பொருளாதார அலகாக கருதி, ஒவ்வொரு குக்கிராமத்தின் மீதும் தனிக்கவனம் செலுத்தி அவற்றிற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்க வேண்டிய அவசியம் உள்ளது.

2. மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளின் வகைப்பாடு (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு):-

தமிழ்நாட்டில் உள்ள 37 மாவட்டங்களில் மொத்தம் 12,525 கிராம ஊராட்சிகள் உள்ளன. கீழ்க்கண்ட அட்டவணையின் படி, கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகை 500க்கு கீழ் முதல் 10,000 க்கு மேல் என்ற பல்வேறு நிலையில் உள்ளது.

Verified RedEstate

அட்டவணை - 1

வ. எண்	மக்கள் தொகை	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
1.	500 க்கு கீழ்	46
2.	501-1000	833
3.	1001-3000	6,822
4.	3001-5000	2,781
5.	5001-10000	1,753
6.	10,000 க்கு மேல்	290
	மொத்தம்	12,525

3. குக்கிராமங்களின் எண்ணிக்கை அடிப்படையில் கிராம ஊராட்சிகளின் வகைப்பாடு:

குக்கிராமங்களின் எண்ணிக்கை அடிப்படையில் கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை - 2

வ. எண்	குக்கிராமங்களின் வரம்பு	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
1.	5 க்கு கீழ்	6,242
2.	5 முதல் 15 வரை	5,434
3.	16 முதல் 25 வரை	637
4.	25 க்கு மேல்	212
	மொத்தம்	12,525

4. நிதி ஒதுக்கீடு :

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II கீழ், குறைந்தபட்ச அடிப்படை நிதியாக தலா ரூ.30.00 இலட்சம் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வழங்கப்படுகிறது. மேலும் செயல்திறன் ஊக்க நிதியாக ரூ5.00 இலட்சம் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வழங்கப்படும். இதைத்தவிர 2% நிதியானது நிர்வாகச் செலவுகள், தகவல், கல்வி, தொடர்பு, ஆவணப்படுத்துதல் மற்றும் திறன் வளர்ப்பு ஆகியவை சார்ந்த

Verified RealEstate™

நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்படும். மக்கள் தொகை மானியம், குக்கிராம மானியம் ஆகியவற்றை கணக்கிடும்போது குக்கிராம எண்ணிக்கைக்கு 50 விழுக்காடும், மக்கள்தொகை எண்ணிக்கைக்கு 50 விழுக்காடும் நிதி வழங்கப்படுகிறது.

வ. எண்	வகைப்பாடு	தொகை (ரூ இலட்சம்)
1.	அடிப்படை நிதி	ரூ.30.00
2.	செயல்திறன் ஊக்க நிதி	ரூ.5.00
3.	நிர்வாகம் /IEC நிதி	மொத்த ஒதுக்கீட்டில் 2%
4.	மக்கள் தொகை அடிப்படையிலான நிதி	மீதமுள்ள தொகையில் 50%
5.	குக்கிராம எண்ணிக்கை அடிப்படையிலான நிதி	மீதமுள்ள தொகையில் 50%

2023-2024-ஆம் நிதி ஆண்டில் 2,504 கிராம ஊராட்சிகளுக்கு (மொத்த எண்ணிக்கையில் (21.2%)) ரூ.1148.69 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. "அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி" என்ற அடிப்படையில் 30% ஒதுக்கீடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளுக்கு வழங்குவது உறுதி செய்யப்படும். அனைத்து குக்கிராம பகுதிகளிலும் சமமான வளர்ச்சியை ஏற்படுத்த பணிகளை தேர்வுசெய்வதன் மூலம் உறுதி செய்ய "குக்கிராம பணித்தொகுப்பு" பின்பற்றப்படும்.

செயல்திறன் ஊக்க நிதியானது கீழ்கண்ட 9 காரணிகளின் அடிப்படையில், அவை எய்தப்பட்ட அளவிற்கு ஏற்ப ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

1. 100% அனைத்து வணிக ரீதியான நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் வரி விதிப்பு நிர்ணயம் செய்தல்.
2. 100% சொத்துவரி மற்றும் வீட்டு வரியை வசூல் செய்தல்.
3. 100% மின்கட்டணம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் கட்டணங்களை செலுத்துதல்.
4. தெருவிளக்கு மற்றும் குடிநீர் விநியோகம் தொடர்பான மின்சார செலவில் கடந்த 12 மாத சராசரி அளவில் 20% சேமித்தல்.

Verified RealEstate™

5. 100% கழிவறைகளை பயன்படுத்துதல் மற்றும் திறந்த வெளியிடங்களில் மலம் கழிக்காத நிலையை உருவாக்குதல்.
6. 100% கிராம ஊராட்சியில் உள்ள நீர்நிலைகள் மற்றும் பொது திறந்தவெளி ஒதுக்கீடு நிலம் (OSR Land) ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.
7. 100% அனைத்து அரசு மற்றும் தனியார் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் முறையாக பயன்படுத்துவதை உறுதிசெய்தல்.
8. திட மற்றும் திரவக்கழிவுகள் மேலாண்மை தொடர்பாக ஓர் முறையான திட்ட வரைவை கிராம ஊராட்சி தயாரித்து இருக்க வேண்டும். அதில் 80% திட்ட பணிகள் முடிக்கப்பட்டு, கிராம ஊராட்சி திட மற்றும் திரவக் கழிவுகள் தேக்கம் இல்லாத ஊராட்சியாக மாற்றப்பட்டு சாம்பல் நிற கழிவு நீர் தேங்காத ஊராட்சியாக இருத்தல் வேண்டும்.
9. கிராம ஊராட்சியின் மொத்த பரப்பளவில், கூடுதலாக 1% மரக்கன்றுகள் (ஒரு ஹெக்டருக்கு 500) வீதம் நடப்பட்டிருக்க வேண்டும். (ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு மரக்கன்றுகள் நடப்படுவதை உறுதி செய்ய வேண்டும்).

மேற்கண்ட பணிகளை மாவட்ட ஆட்சியரை தலைவராக கொண்ட மாவட்ட அளவிலான ஓர் குழு மதிப்பீடு செய்யும். இக்குழுவில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), உதவித் திட்ட அலுவலர் (உட்கட்டமைப்பு), உதவித் திட்ட அலுவலர் (வீடுகள்/சுகாதாரம்) மற்றும் உதவித் திட்ட அலுவலர் (ஊதியம் மற்றும் வேலைவாய்ப்பு) ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர்.

மாவட்ட அளவிலான குழு 01.04.2023ஐ அடிப்படைத் தேதியாக கொண்டு கிராம ஊராட்சிகளின் செயல் திறனை மதிப்பீடு செய்து 31.03.2024 வரையிலான காலத்தை (அதாவது 01.04.2023 முதல் 31.03.2024 வரை) மதிப்பாய்வு செய்ய வேண்டும், 2023-24 ஆம் ஆண்டிற்கான சாதனைகள், ஏப்ரல் 2024 இல் ஆராயப்பட வேண்டும்.

ஏப்ரல் 2024 இல் கிராம ஊராட்சிகளின் செயல் திறனின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல் திறன் ஊக்க நிதிக்கு அனுமதி வழங்குவார். இந்த நிதி வரிசை எண்.6-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

Verified RolEstore

மேற்கூறியவாறு அனுமதிக்கப்பட்டது போக மீதமுள்ள நிதி ஒருங்கிணைக்கப்பட்டு, சமச்சீராக, மேற்கூறிய 9 காரணிகளில் 7 காரணிகள் மற்றும் அதற்கு மேல் நிறைவேற்றிய கிராம ஊராட்சிகளுக்கு ரூ.5.00 இலட்சத்திற்கு மிகாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்குவார். இதன் பிறகும், மீதமுள்ள தொகை இருப்பின் இயக்குநரகத்திற்கு மீள திருப்பப்பட வேண்டும். மேற்கண்ட நிதி ஒதுக்கீடுகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், கிராம ஊராட்சி வாரியாக செயல்முறை ஆணைகள் பிறப்பிக்க வேண்டும்.

5. பணிகளை தேர்வு செய்தல்:

குக்கிராமங்களில் உள்ள அடிப்படை உட்கட்டமைப்பு இடைவெளி தேவைகள் குறித்த கணக்கெடுப்பு, சம்மந்தப்பட்ட அலுவலர்கள், கிராம அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர் மற்றும் கிராம ஊராட்சி தலைவர்களால் முதல் ஆண்டு திட்ட செயலாக்க பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. கணக்கெடுப்பு அடிப்படையில் கிராம ஊராட்சி வாரியாக தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பு பணிகள் கண்டறியப்பட்டுள்ளன. இதன் மூலம் மேற்கொள்ள வேண்டிய பணிகள், இரண்டு பரந்த இனங்களின் கீழ் வகை பிரிக்கப்பட்டுள்ளது. (1) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் நிதியை பயன்படுத்தி செயல்படுத்தப்படும் பணிகள், (2) ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் பிற திட்டங்கள் மற்றும் பல்வேறு இதர துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் பணிகள்.

இடைவெளி தேவைகள் குறித்த ஆய்வின்படி வரிசை எண்.6-ல் பரிந்துரைக்கப்பட்டுள்ள பணிகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்- II இன் கீழ் மேற்கொள்ளப்படும்.

6. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II-ன் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் பணிகள்:

வ. எண்	பணியின் வகைகள்	நிதி ஒதுக்கீடு
1.	நீர் நிலைகள் புனரமைத்தல்	30%
2.	குக்கிராமங்களில் தெருக்கள் / வீதிகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்	25%
3.	சமத்துவ சுடுகாடு / இடுகாடு என்று பரிந்துரைக்கப்பட்ட இடங்களில்	10%

Verified by RealEstate

	தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளுதல்	
4.	பள்ளிகளில் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொதுப்பயன்பாட்டு கட்டமைப்புகளை உருவாக்குதல்	15%
5.	பசுமை மற்றும் சுத்தமான கிராமம்	10%
6.	வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை ஒருங்கிணைத்தல்	10%

6.1 நீர் நிலைகள் புனரமைத்தல் :

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் 22,051 சிறுபாசன ஏரிகளும், 69,768 குளங்கள்/ஊருணிகளும் உள்ளன. இவற்றில் சிறுபாசன ஏரிகள் ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டிலும் குளங்கள் மற்றும் ஊருணிகள் கிராம ஊராட்சிகளின் கட்டுப்பாட்டிலும் உள்ளன.

பருவமழை பொய்ப்பதாலும், விவசாயம், வீட்டு உபயோகம் மற்றும் தொழிற்சாலை சார்ந்த தேவைகளுக்கு அதிக அளவில் நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதாலும் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களில், 165 ஒன்றியங்களில் நிலத்தடி நீர் மட்டமானது மிக குறைவாக உள்ளது. இதனை சீராக்க ஊரகப்பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் முழுமையான அளவில் உயர்த்தப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. இதற்காக பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

1. குளங்கள் / ஊருணிகள்
2. சிறுபாசன ஏரிகள்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II கீழ் புனரமைத்தல் :

கிராம ஊராட்சி/ ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குளங்கள், ஊருணிகள், சிறு பாசன ஏரிகளில், கடந்த ஐந்தாண்டு காலத்தில் எந்த பணிகளும் மேற்கொள்ளாத நீர்நிலைகளில் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு குக்கிராமத்திலும் உள்ள குளங்கள் மற்றும் ஊருணிகளில் பணிகள் மேற்கொள்ளப்படும். இவற்றில் கூடுதலாக வரத்து மற்றும் போக்கு கால்வாய்கள், மதகுகள் மற்றும் கலிங்குகள் சீரமைப்பு, வடிகால்கள், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், அளவீடு செய்து எல்லை கற்கள் அமைத்தல், சிறு குளங்கள், குளியல் படித்துறைகள் ஆகியவை

Verified@RealEstate™

தேவையின் அடிப்படையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் மேற்கொள்ளப்படும்.

இப்பணிகளின் மூலம் நீர்நிலைகள் முழுக்கொள்ளளவுதிறன் கொண்டதாகவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த கூடியதாகவும், அதிகப்படியான வெளியேறும் நீரை தடுத்து சேமிக்கும் வகையிலும் இருப்பதை உறுதி செய்யப்பட வேண்டும். பணிகளை தேர்வு செய்யும் முன்பு மேற்கண்ட பயன்பெறும் வகையில் பணிகள் உள்ளதா என்பதை உறுதி செய்யப்பட வேண்டும்.

சிறு பாசன ஏரி புனரமைப்பு, அவ்வூராட்சியிலுள்ள அனைத்து குளங்கள் மற்றும் ஊருணிகள் புனரமைக்கப்பட்ட பின்பே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு பணிகளை தேர்வு செய்யவும், செயல்படுத்தவும் கீழ்க்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

6.1அ. குளங்கள் / ஊருணிகள்:

குளங்கள்/ஊருணிகளை தேர்வு செய்தல் : அவ்வூர் மக்களால் பிரதானமாக பயன்படுத்தப்படும் குளங்கள்/ஊருணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். தனியாருக்கு சொந்தமானவற்றில் பணிகள் எடுக்கக்கூடாது.

1. இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில் குளங்கள், அதிக அளவில் நீர்ப்பிடிப்பு / நிலத்தடி நீர் சேமிப்பிற்கு உகந்ததாக இருந்தால் இந்து சமய அறநிலைத்துறையிடம் தடையில்லா சான்று பெற்று இத்திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ளலாம். (கிராம ஊராட்சியில் உள்ள அனைத்து குளங்கள் / ஊருணிகள் மற்றும் சிறுபாசன ஏரிகள் முழுமையாக புனரமைக்கப்பட்டிருப்பின் சுற்றுலா பண்பாடு மற்றும் சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர் நிலைப் பணிகள் மேற்கொள்ளப்படலாம்).
2. குக்கிராமத்திற்கு வெளியே உள்ள குளங்கள் / ஊருணிகளை விட குக்கிராமத்திற்குள் உள்ள குளங்கள், ஊருணிகளுக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும்.
3. இணைப்பு I-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குளங்கள், ஊருணிகள், கால்வாய்களை தூர்வாருதல், குளியல் துறைகள் அமைத்தல், தடுப்பு சுவர்கட்டுதல், விளக்குகள் மற்றும் அமரும் இருக்கைகள் அமைத்தல், சிறு குளங்கள், நீர்வடிகால் அமைப்புக்கள் ஆகிய

Verified RealEstate

பணிகளை அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்- II இன் கீழ் மேற்கொள்ளலாம்.

ஆவணப்படுத்துதல்:

பணிகள் குறித்த விவரங்கள் அடங்கிய பெயர் பலகைகள் ஒவ்வொரு பணியிடத்திலும் நிறுவப்படல் வேண்டும். அதில் அந்த இடத்தின் வரலாறு, அந்தப் பகுதி குறித்த விவரங்கள், பாசன ஆயக்கட்டுகள் போன்ற விவரங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

6.1(ஆ) சிறு பாசன ஏரிகள் :

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கீழ் உள்ள சிறு பாசன ஏரிகளில், முழு கொள்ளளவை எட்டும் வகையில் பணிகள், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும் வகையிலான செயல்பாடுகள், அதிகப்படியான நீர் வெளியேறுவதை, ஏரிகளில் உடைப்பு ஏற்படுவதை தடுக்கும் பணிகள், போதுமான குடிநீர் மற்றும் விவசாய பணிகளுக்காக நீர் தேவைகளை தொடர்ந்தளித்து, பாசன பகுதிகளை விரிவுபடுத்தி, விளைச்சலை அதிகப்படுத்தும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சிறு பாசன ஏரிகளில் ஒருங்கிணைந்த அளவில் முழுமையான மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளுவதற்கு ஏரியின் உண்மையான முழுகொள்ளளவு, நீரியக்க அளவீடுகள் ஆகியவற்றை கணக்கீடு செய்து அதற்கு தகுந்தவாறு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சிறு பாசன ஏரி மேம்பாட்டுப் பணிகள் கீழ்கண்ட கூறுகளை கொண்டதாக இருக்க வேண்டும்.

அ.) நீர் இருப்பு மற்றும் பரப்பளவை மேம்படுத்த தேவையான பணிகளான புதர்களை அகற்றுதல், தூர்வாருதல் மற்றும் ஆழப்படுத்துதல் ஆகியவற்றிற்கு தேவைப்படின் இயந்திரங்களை பயன்படுத்தலாம்.

ஆ.) தூர்வாரப்பட்ட மண்ணை ஏரியின் கரைகளை பலப்படுத்தி, கரையின் அகலத்தை பழைய நிலைக்கு மீள் கொணருதல் மற்றும் தேவையான இடங்களில் நீர் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளுதல்.

இ.) வரத்து / போக்கு கால்வாய்கள், மதகுகள் மற்றும் கலங்குகள் பழுதுபார்த்தல் / மறு சீரமைத்தல்.

பணியின் நோக்கம் :

சிறு பாசன ஏரியினை முறையாக முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்தல், விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும்

Verified by RodEstate

முழுமையாக செயல்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்படல் வேண்டும். (இணைப்பு-II இல் கொடுக்கப்பட்டுள்ள செயல்முறை வழிகாட்டிகளின் படி)

6.1(இ) மழைநீர் சேகரிப்பு அமைப்புகள்:

ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சியின் சொந்தக்கட்டடங்கள் மற்றும் சமுதாய அமைப்புகளில் இதுவரையில் எந்த திட்டத்திலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மேற்கொள்ளப்படாத கட்டடங்களில் மாநில நிதிக்குழு மானியம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் / கிராம ஊராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

அனைத்து தனியார் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பானது அவரவர்களின் சொந்த செலவில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு தேவையான விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும்.

6.1(ஈ) நீர்நிலைகள் சார்ந்த விவரங்களை கணினி மயமாக்குதல்:

நீர்நிலைகள், அவற்றின் வரத்து மற்றும் போக்கு கால்வாய் ஆகியவற்றின் விவரங்களை வருவாய் துறையிடம் உள்ள ஆவணங்கள் மற்றும் நில வரைபடத்தின் அடிப்படையில் (FMB) கணினிமயமாக்கப்படல் வேண்டும்.

நீர்நிலைகளை புனரமைக்க மேற்கூறப்பட்ட கூறுகளுக்கு 30% திட்ட நிதி பயன்படுத்தப்பட வேண்டும்.

6.2 குக்கிராமங்களில் தெருக்கள் / வீதிகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் ஆகியவற்றில் தெருக்கள் / வீதிகள் மேம்படுத்தும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணிகள் கீழ்க்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி தேர்வு செய்யப்பட வேண்டும்.

1.) இருபுறமும் அதிக எண்ணிக்கையிலான வீடுகள் அமைந்துள்ள தெருக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

2.) வருவாய் மற்றும் பேரிடர் மீட்புத் துறையினால், பேரிடர் பாதிப்புகளுக்கு உள்ளாகும் பகுதிகள் என்று வரையறுக்கப்பட்டுள்ள தெருக்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டும்.

3.) தெருவின் நடுவே மின் கம்பம் அல்லது தொலைபேசி இணைப்பு கம்பம் இருப்பின் அதனை அப்புறப்படுத்தி சாலை ஓரத்தில் அமைத்த பின்னரே சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட வேண்டும்.

4.) ஒரே பணி சிறு சிறு பணிகளாக பிரித்து எடுக்கப்படுவதை தவிர்க்க வேண்டும்.

5.) பேவர் பிளாக் அல்லது சிமெண்ட் கான்கிரீட் சாலை பணிகள் மேற்கொள்ளலாம். தேவைப்படின் குறுக்கு வடிகால்களும் இப்பணிகளுடன் சேர்த்து அமைக்கலாம்.

6.) கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகளை தனிப் பணியாக மேற்கொள்ளக் கூடாது.

7.) சிறுபாலங்கள் (Culvert) / குறுக்கு வடிகால்கள் அமைப்பதற்கு தேவைப்படின், உதவி செயற்பொறியாளர் எழுத்து மூலமாக பரிந்துரைக்க வேண்டும். அதன் அடிப்படையிலேயே பணிகள் மேற்கொள்ள வேண்டும். (வழிகாட்டு நெறிமுறைகள் இணைப்பு – III இல் கொடுக்கப்பட்டுள்ளது)

தெருக்கள் / வீதிகள் மேம்பாட்டிற்கு 25% திட்ட நிதியை பயன்படுத்தப்பட வேண்டும்.

6.3 சமத்துவ சுடுகாடு / இடுகாடு என்று பரிந்துரைக்கப்பட்ட இடங்களில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளுதல்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் இடுகாடு / சுடுகாடு மேம்பாட்டிற்கு இரண்டு பிரிவுகளில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

அ. எரிவாயு சுடுகாடு

நகர்ப்புற மற்றும் தொழில் பகுதிகளுக்கு அருகில் உள்ள கிராம ஊராட்சிகள் மக்கள் நெருக்கம் மிகுந்ததாகவும், சுடுகாடு/இடுகாடு அமைக்க தேவையான நிலபற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது.

எனவே, நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளில் எரிவாயு சுடுகாடு கிராம ஊராட்சி தொகுப்பிற்கு நிறுவலாம். இதற்கான மூலதனச் செலவானது, ஒருங்கிணைந்த ஒப்பளிக்கப்பட்ட வருவாய் திட்ட நிதி கூறு

மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் மேற்கொள்ளப்படும். ஏற்கனவே எரிவாயு சுடுகாடு 10 கிலோமீட்டர் சுற்றளவில் அமைந்துள்ள இடத்தில் மீண்டும் நிறுவப்படக்கூடாது. இச்சுடுகாடு, இரட்டை அறை தகனம் செய்யும் மர எரிவாயு உலை, எரிவாயு பர்னர்கள், எரிவாயு கட்டுப்பாட்டுக் கருவிகள், எரிவாயு கழிவுகளை கட்டுப்படுத்தக் கூடிய உபகரணங்கள், கட்டுப்பாட்டு குழு பலகை மற்றும் பிற தேவையான உபகரணங்களுடன் அமைக்கப்படும். இந்த எரிவாயு சுடுகாட்டின் செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்கு இத்துறையில் அனுபவம் பெற்ற அரசு சாரா நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளலாம்.

ஆ. தற்போதுள்ள இடுகாடுகள் / சுடுகாடுகள் மேம்படுத்துதல்

ஊரகப்பகுதிகளில், இடுகாடு/சுடுகாடு பணிகள் ஏற்கனவே அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மற்றும் தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டு (தாய்) திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் இடுகாடு/சுடுகாடுகளுக்கான மேம்பாட்டுப் பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது எந்த ஊராட்சியில் அவ்வூராட்சியின் சுடுகாடு/இடுகாடுகள் அனைத்து சமுதாய மக்களுக்கும் உரியது என ஊராட்சி மன்ற தீர்மானமும் கிராம சபை தீர்மானமும் நிறைவேற்றி சாதி வேறுபாடற்ற சுடுகாடு/இடுகாடு பயன்பாட்டில் இருப்பின் அவற்றிற்கு தேவையான வசதிகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் எடுத்துக் கொள்ளலாம்.

பின்வரும் கூறுகளை அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்- II இன் கீழ் எடுத்துக் கொள்ளலாம்:

1. அணுகு சாலை:

3 மீட்டர் அகல சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை அல்லது அவ்விடத்திற்கு தகுந்த அகலத்தில் நுழைவு வாயில் முதல் தகன கொட்டகை வரை தேவையின் அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட வேண்டும்.

2. தகன கொட்டகை அமைத்தல் / காத்திருக்கும் கொட்டகை அமைத்தல்:

தகனகொட்டகை / காத்திருக்கும் கொட்டகை அமைத்தல் தேவையான இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

Verified@RedEstate

3. இடுகாடுகளுக்கு குடிநீர் வழங்கல்:

இடுகாடு/சுடுகாட்டில் ஒரு கை பம்பு அமைக்கப்படும். குழாய் இணைப்புடன் கூடிய தொட்டி (syntax tank) கை பம்பு எடுக்க முடியாத இடங்களில் குழாய் நீட்டிப்புடன் அமைக்கப்படும்.

4. இடுகாடுகளுக்கு பாதை

அணுகு சாலை இல்லாத இடங்களில், ஆதிதிராவிட நல நிதி அல்லது பிற்படுத்தப்பட்டோர் நல நிதியைப் பயன்படுத்தி நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். இப்பணிக்கு மாவட்ட ஆட்சியர் அதிக முன்னுரிமை அளிக்க வேண்டும். நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் நிதியைப் பயன்படுத்தி தார் சாலை அமைக்கப்பட வேண்டும். சாலை வசதி ஏற்கனவே இருப்பின் தேவையின் அடிப்படையில் மண் / சரளை / கப்பி (WBM) சாலை, தார் சாலையாக மேம்படுத்தப்பட வேண்டும். தற்போதுள்ள தார் சாலை சேதமடைந்த நிலையில் இருப்பின், தற்போதுள்ள விதிமுறைகளின்படி புதுப்பித்தல் பணிகள் செய்யப்பட வேண்டும்.

5. விளக்கு வசதி :

தேவையின் அடிப்படையில் விளக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படலாம். இடுகாடு ஒரு தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் நெடுந்தொலைவில் இருந்தால் சூரிய விளக்குகள் நிறுவப்படலாம்.

6. சுற்றுச் சுவர்:

நுழைவாயில் இருபுறமும் செங்கல் சுற்றுச் சுவர் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II இன் கீழ் எடுத்துக் கொள்ளப்படலாம். மீதமுள்ள மூன்று பக்கங்களில் பொருத்தமான தாவர வகைகளைப் பயன்படுத்தி வேலி அமைக்கப்படலாம். இந்த சுற்றுச் சுவரில் சமூக நல்லிணக்கத்திற்கான வாசகங்கள் (எடுத்துக்காட்டு ஒன்றே குலம் ஒருவனே தேவன்), திருக்குறள் மற்றும் தமிழ் இலக்கியங்கள் ஆகியவற்றிலிருந்து சமத்துவ சொற்றொடர்கள் மற்றும் பெருந்தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் மேற்கோள்கள் எழுதப்படவேண்டும்.

மயான மேம்பாட்டுப் பணிகள் அல்லது இடுகாடுகளுக்கான பாதை, செயற்பொறியாளரால் (ஊ.வ) தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அவரின் தனிப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும். மேலும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அப்பணியை

எடுப்பதற்கு முன் பணியின் அவசியத்தை உறுதி செய்து கொள்ளவேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட வசதிகள் ஏதேனும் ஏற்கனவே இடுகாடு/சுடுகாட்டில் இருந்தால், அந்த குறிப்பிட்ட கூறு (கள்) எடுத்துக் கொள்ளப்படக்கூடாது.

மேலே உள்ள பணிகளுக்கு மொத்த ஒதுக்கீட்டில் இருந்து 10% வரை பயன்படுத்தப்பட வேண்டும்.

6.4. பள்ளிகளில் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொதுப்பயன்பாட்டு கட்டமைப்புகளை உருவாக்குதல்

6.4.அ. பள்ளிகள்:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு தேவைகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்களின் கீழ் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் சுற்றுச் சுவர், சமையலறை, பள்ளி மாணவர்களுக்கான கழிப்பறை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இல் எடுக்கப்பட்ட இடைவெளி பகுப்பாய்வு கணக்கெடுப்பின்படி, கிராமப்புறங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியம் மற்றும் அரசுப் பள்ளிகளுக்கு மிதிவண்டி நிறுத்துமிடம், சமையலறை, பள்ளி மாணவர்களுக்கான கழிப்பறை மற்றும் ஆசிரியர்களுக்கான கழிப்பறைகள் போன்ற கூடுதல் வசதிகள் தேவைப்படுகின்றன. அதிக மாணவர் உள்ள பள்ளிகளுக்கு முதன்மை கல்வி அலுவலருடன் கலந்தாலோசித்து முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். எனவே, மேற்கண்ட பணிகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்- II இன் கீழ் மேற்கொள்ளப்படும். மேலும் பள்ளிகளுக்கு தேவையான குடிநீர் வசதி, ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

6.4.ஆ. பொது பயன்பாட்டு உட்கட்டமைப்பு:

ஊரக பகுதி மக்களுக்கு அனைத்து அரசு சேவைகளையும் வழங்கும் பொருட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்களின் கீழ் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம், பொது விநியோகக் கடை, அங்கன்வாடி, தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, சமுதாயக் கூடம், கழிப்பறை, தெருவிளக்கு, குடிநீர் வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Verified by BoatState

இதன் தொடர்ச்சியாக, அங்கன்வாடி, ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம், பொது விநியோகக் கடை, பொது விநியோகக் கடைகளுக்கு கூடுதல் வசதிகள் மற்றும் தற்போது பயன்பாட்டில் உள்ள பேருந்து நிலையங்களின் வசதிகள் போன்ற பொதுப் பயன்பாட்டு உட்கட்டமைப்புகள் உருவாக்குதல், போன்ற தேவைகள் இந்த ஆய்வின்போது, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் முக்கிய இடைவெளிகளாக கண்டறியப்பட்டுள்ளன. மேற்கூறியவற்றில் புதிதாக கட்டிடங்கள் கட்டுவதை தெரிவு செய்வதற்கு முன் பயன்பாட்டில் இல்லாத பழைய கட்டடங்களின் நிலையை ஆய்வு செய்யப்பட வேண்டும்.

மேற்கூறிய கட்டடங்கள் பழுதுபார்க்கும் நிலையில் இருப்பின் பிற திட்டங்களின் கீழ் பழுதுபார்க்கப்பட வேண்டும். பழுதுபார்க்கும் பணிக்கு வாய்ப்பு இல்லை எனில், விதிமுறைகளின் படி அதற்குரிய அலுவலர்களின் சான்றிதழ் பெற்று அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் புதிய கட்டடம் எடுக்கப்படலாம்.

6.4.ஆ.1. கிராம ஊராட்சி அலுவலகம்:

ஏற்கனவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தேசிய கிராம சுயாட்சி திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் கிராம ஊராட்சி மன்ற அலுவலகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை சொந்தக் கட்டடம் இல்லாத ஊராட்சி மற்றும் பழுதடைந்த நிலையில் உள்ள கிராம ஊராட்சி மன்ற அலுவலக கட்டங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

6.4.ஆ.2. அங்கன்வாடி மையங்கள்:

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்துடன் இணைந்து, தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் கிராம ஊராட்சிகளில் அங்கன்வாடி கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

தற்போது, தேவையின் அடிப்படையில் தனியார் கட்டடங்களில் செயல்படும் அங்கன்வாடி மையங்களுக்கு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் புதிய கட்டடம் கட்டப்படும்.

6.4.ஆ.3.பொது விநியோக கடை:

பொது விநியோக கடைகள், தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ்

Verified by RealEstate

கட்டப்பட்டுள்ளன. தனியார் கட்டிடங்களில் வாடகைக்கு இயங்கும் முழுநேர பொது விநியோகக் கடைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் புதிய கட்டடம் கட்டப்படலாம்.

6.4.ஆ.4. தற்போதுள்ள பொது விநியோகக் கடைக்கு கூடுதல் வசதிகள்:

பொது விநியோகக் கடைக்கு வரும் பொது மக்களுக்கு தேவையான கழிப்பறைகள், பொது விநியோகக் கடையின் முன் அல்லது பின்பக்கத்தில் நிலம் உள்ள இடங்களில், தூய்மை பாரத இயக்கத்துடன் ஒருங்கிணைந்து கட்டப்படும். இது சொந்த கட்டடத்தில் முழு நேரமாக செயல்படும் பொது விநியோகக் கடைகளுக்கு மட்டுமே எடுக்கப்பட வேண்டும். இது கிராம ஊராட்சியின் சொத்தாகும்.

6.4.ஆ.5. பேருந்து நிலையங்களுக்கு வசதிகள்:

ஊரகப் பகுதிகளில் உள்ள பேருந்து நிலையங்கள் கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த ஒப்பளிக்கப்பட்ட வருவாய் திட்ட நிதியின் கீழ் பேருந்து நிலையம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II கணக்கெடுப்பின் போது பேருந்து நிலையங்களில் கடைகள், குடிநீர் விநியோகம், விளக்குகள் போன்ற வசதிகள் தேவைப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, தற்போது பேருந்து நிலையங்களுக்கு தேவையான கால்வனைசிடு/ ஆர்.சி.சி கூரை, இருக்கை வசதிகள், மின்னணு தகவல் பலகை, விளக்குகள், புதிய கடைகள், குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை ஆகிய பணிகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் எடுக்கப்படும்.

6.4.ஆ.6. பள்ளி கட்டடங்கள்:

தேவைப்படும் இடங்களில், ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தேவைக்கேற்ப பள்ளிக் கட்டிடங்கள் எடுக்கப்படலாம். கட்டடமே இல்லாத பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

6.4.ஆ.7. தெருவிளக்குகள்:

- தேவையின் அடிப்படையில் புதிய ஒளி உமிழும் டையோடு (LED) விளக்குகள் தெரு விளக்குகளாக அமைக்கப்படலாம்.
- புதிய குடியிருப்புகள், விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள், இந்திரா

நினைவு / பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்புகள், சுடுகாடு/இடுகாட்டிற்கான பாதை போன்ற இடங்களில் புதிய ஒளி உமிழும் டையோடு (LED) விளக்குகள் கொண்ட தெரு விளக்குகள் முன்னுரிமை அடிப்படையில் அமைக்கலாம்.

- தேவை பூர்த்தியாகாத இடங்களில் கூடுதல் புதிய ஒளி உமிழும் டையோடு (LED) தெரு விளக்குகள் அமைக்கலாம்.
- மேற்படி பணிகள் மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு திட்டம் உட்பட வேறு எந்தவொரு திட்டத்திலும் மேற்கொள்ளப்படாததை உறுதி செய்து கொள்ள வேண்டும்
- தமிழ்நாடு மின்சார வாரியம் அல்லது ஜெம் (GEM) மூலம் கொள்முதல் செய்யப்படவேண்டும்.

மொத்த ஒதுக்கீட்டில் இருந்து, 15% நிதியை மேற்கூறிய பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டும்.

6.5. பசுமை மற்றும் சுத்தமான கிராமம் :

6.5.1. பசுமை போர்வை

ஊரகப் பகுதிகளில் பசுமைப் போர்வையை அதிகரிக்க, மாபெரும் மரக் கன்றுகள் நடுதல் பணி பொதுவாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. நடப்பு நிதியாண்டில், தமிழ்நாடு முழுவதும் 70 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. இவற்றிற்கான ஒன்றிய அளவிலான பண்ணைகள் (Nursery) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

கீழ் காணும் கூறுகளுக்காக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் ஊராட்சிகளில் சிறப்பு பண்ணைகள் நிறுவப்படும்.

1. ஊட்டச்சத்து பண்ணைகள் (Nutri-Garden): ஊட்டச்சத்து சமையலறை தோட்டம் / ஊட்டச்சத்து தோட்டம் என்பது ஆண்டு முழுவதும் குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்ய இல்லங்களில் அல்லது அவற்றின் சுற்றுப்புறங்களில் ஊட்டச்சத்து நிறைந்த பயிர்களை விளைவிக்கும் ஒரு முறையாகும். இதன் மூலம் ஊட்டச்சத்து மிக்க உணவு பொருட்கள் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. மேலும் இது துணை வருமான ஆதாரமாக விளங்குகிறது. இதில்

Verified RedEstate

விளைவிக்கப்படும் பொருட்கள் இரசாயன கலவையற்ற மற்றும் பசுமையானதாக உள்ளன.

அங்கன்வாடி மற்றும் பள்ளிக் குழந்தைகள், கீரைகள், முருங்கை, நெல்லிக்காய், பப்பாளி, காளான்கள், சக்கரைவள்ளிக்கிழங்கு போன்றவற்றை உட்கொள்ள ஏதுவாக இது போன்ற ஊட்டசத்து தோட்டங்கள் வீட்டின் பின்புறத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II கீழ் ஊராட்சிகளில் அமைக்கப்படும்.

2. **பொது திறந்தவெளி ஒதுக்கீடு நிலங்களில் (OSR Land) பசுமை போர்வை உருவாக்குதல்:** ஊராட்சிகளில் இதர சொத்து பதிவேடுகளுடன் பொது திறந்தவெளி ஒதுக்கீடு நிலப் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். இதுவரை பயன்படுத்தப்படாத அனைத்து பொது திறந்தவெளி ஒதுக்கீடு நிலங்களில் மியாவாகி (Miyawaki) முறை மற்றும் பிற அடர் மரங்கள் வளர்ப்பு முறைகள் மூலம் பசுமை போர்வை அதிகரிக்கப்பட வேண்டும். வேலி அமைத்தல், நடைபயிற்சி தடம், விளக்குகள், சிறு குடில் (Gazebo) போன்ற கூடுதல் வசதிகள் தேவைக்கேற்ப அமைக்கப்படும்.
3. **ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை மற்றும் பண்ணைகள் அமைத்தல்:** கிராம ஊராட்சிகளில் உள்ள புறம்போக்கு நிலங்கள், பயன்படுத்தப்படாத நிலங்கள் மற்றும் மேய்க்கால் நிலங்கள் ஆகியவற்றில் விவசாயிகள் பயன்பெறும் வண்ணம் திடக்கழிவு மேலாண்மை கூறுகளுடன் கூடிய பண்ணைகள் அமைக்கப்படும்.

மேற்படி நிலங்களை வேலி, நீர் சேகரிப்பு அமைப்புகள், திடக்கழிவு மேலாண்மை கூறுகளுடன் நான்கு தனித்துவமிக்க பகுதிகளாக பிரித்து கீழ் கண்டவாறு உருவாக்கலாம்.

1. மேற்படி நிலத்தின் முதல் பகுதியை தோட்டக்கலைத் துறையுடன் ஒருங்கிணைத்து பண்ணைத் தோட்டம் அமைக்கப்படும். இப்பண்ணை தோட்டத்தில் விவசாயிகளின் விருப்பத்தை மனதில் கொண்டு மரக்கன்றுகள்/பயிர் வகை இரகங்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதன் நோக்கம் கிராம ஊராட்சிகள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தோட்டக்கலை பயிர்கள் பயிரிடுவதன் பரப்பளவு அதிகரிப்பதாகும்.

2. இரண்டாவது நிலப் பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மியாவாகி / பிற அடர் மரங்கள் வளர்ப்பு முறைகள் / சமூக வனவியல் போன்றவற்றின் படி மரங்கள் வளர்க்கப்பட வேண்டும்.
3. நிலத்தின் மூன்றாவது பகுதியில் கசிவு நீர் குட்டைகள், பண்ணைக் குட்டைகள் அமைத்தல் போன்ற மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. மீதமுள்ள நான்காவது நிலப்பகுதி, தீவனப் பயிர் வளர்ப்புக்காக (புல் மற்றும் மரத்தீவனம்) என ஒதுக்கப்பட வேண்டும். இந்நடவடிக்கைகள் கால்நடை பராமரிப்புத் துறையுடன் கலந்தாலோசித்து எடுக்கப்பட வேண்டும். பசுந்தீவன விநியோகம் மற்றும் பசுந்தீவனப் வளர்ப்பு இதன் முக்கிய நோக்கமாகும்.

ஒருங்கிணைந்த பண்ணைகள் நிர்வகித்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக பிற துறைகளுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும். பண்ணைகளில் பயன்படுத்துவதற்காக குக்கிராமங்களில் கிடைக்கக் கூடிய திடக்கழிவுகளை பயன்படுத்தி உரம் / மண்புழு உரம் தயாரிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்வசதிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் / தூய்மை பாரத இயக்கம்-II நிதி / 15வது மத்திய நிதிக் குழு மானிய நிதியின் கீழ் இந்த வசதிகள் வழங்கப்பட வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட வழிகாட்டுதல்களின் கீழ் மேற்கொள்ள முடியாத பணிகளான, பண்ணை வேலி அமைத்தல் மற்றும் கூடுதல் பொருள் தேவைகள் போன்றவை அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் மேற்கொள்ளப்படும். இந்த ஒருங்கிணைந்த பண்ணை, விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கும், இப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு தேவையான மரக்கன்றுகளை விநியோகிப்பதற்கும் விரிவாக்க மையங்களாக செயல்படும்.

6.5.2.சுகாதாரம்:

பாதுகாப்பான சுகாதாரம் மற்றும் தூய்மைப் பணிகளுக்கு இவ்வரசு எப்போதும் முன்னுரிமை அளித்து வருகிறது. தூய்மையான மற்றும் பசுமை கிராமங்களை உருவாக்க ஏராளமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ்,

ஒவ்வொரு கிராம ஊராட்சியும் குக்கிராம சுகாதார செறிவு திட்டங்களை (HSSP) உள்ளடக்கிய, கிராம சுகாதார செறிவு திட்டத்தை (VSSP) உருவாக்கும். இத்திட்டமானது ஊராட்சித் தலைவர், ஒன்றிய மேற்பார்வையாளர், கிராம ஊராட்சி செயலர், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர் மற்றும் அந்த குக்கிராமத்திற்கான தூய்மை ஊக்குனர் ஆகியோரை உள்ளடக்கிய குழுவின் மூலம் பங்கேற்பு ஊரக மதிப்பீட்டு முறையின் படி தயாரிக்கப்படும். 100% திடக்கழிவு மேலாண்மை (SWM) மற்றும் திரவ கழிவு மேலாண்மை (LWM) ஆகியவற்றிற்கான செயல் திட்டமாக இது இருக்க வேண்டும். கீழ் கண்ட நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும்.

1. ஒவ்வொரு குக்கிராமத்திலும் நடைபயணம் மேற்கொண்டு ஒவ்வொரு வீட்டினையும் அவற்றின் வகையின் அடிப்படையில் வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றை கருத்தில் கொண்டு மாறுபட்ட வண்ணங்களில் குறித்தல் வேண்டும்.

2. **கழிப்பறை செயல்பாடு:**

   ஊரகப் பங்கேற்பு மதிப்பீடுட்டுக் குழு நடைப்பயணத்தை மேற்கொண்ட கணக்கெடுப்பின் படி செயல்படும், செயல்படாத மற்றும் செயலற்ற கழிப்பறைகளை அடையாளம் கண்டு குக்கிராம தெரு வரைபடத்தில் குறிப்பிட வேண்டும். இதன் தொடர்ச்சியாக உதவி பொறியாளர் கழிவுநீர் அகற்றலில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கான செயல் திட்டத்தை தூய்மை பாரத இயக்கம்-II மற்றும் 15வது மத்திய நிதிக்குழு மானியம் நிதிகளுடன் இணைத்து தயாரிக்க வேண்டும். நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிளில் மக்கள் தொகை மிகுந்த குடியிருப்புகளில், சாத்தியக்கூறு ஆய்வை நடத்தி கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் (தூய்மை பாரத இயக்கம்-II மற்றும் 15வது மத்திய நிதிக் குழு மானியம் ஒருங்கிணைப்புடன்) அமைக்கப்படலாம்.

3. **சாம்பல் நீர் மேலாண்மை**

   ஊரகப் பங்கேற்பு மதிப்பீடுட்டுக் குழுவானது ஊரக பகுதிகளில் உள்ள வீடுகளை அவற்றின் சாம்பல் நீர் மேலாண்மை

Verified @ RealEstate

நடைமுறையின் அடிப்படையில் சொந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டவை / எந்த ஏற்பாடும் செய்யப்படாதவை / கழிவு நீர் கால்வாயில் விடுபவை என வகைப்படுத்தும். மேற்கூறியவற்றில் உள்ள இடைவெளிகளை உதவி பொறியாளர் அடையாளம் கண்டு ஒரு முழுமையான சாம்பல் நீர் மேலாண்மை திட்டத்தை உருவாக்குவார். இதன் அடிப்படையில் வீடுகளில் ஊட்டச்சத்து தோட்டங்கள் / தனிநபர் உறிஞ்சுக் குழிகள் / சமூக உறிஞ்சுக் குழிகள் ஆகிய பணிகள் தூய்மை பாரத இயக்கம்-II / 15 வது மத்திய நிதிக் குழுமானியம் நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும்.

4. சாம்பல் நீர் மேலாண்மைக்கான பொது வடிகால் :

தற்போதுள்ள வடிகால்களில் சரியான முறையில் அகற்றுவதற்கான/ அகற்றப்படாதவைகள் மற்றும் நீர்நிலைகளில் விடப்படுபவை அடையாளம் காணப்பட்டு, கிடைமட்ட / செங்குத்து / உயிரி வடிகட்டிகள் மூலம் சுத்திகரிக்கப்பட்டு விடப்படும் வகையில் உதவி பொறியாளரால் செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இத்தகைய அத்தியாவசியமான வடிகால் இணைப்புகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II மற்றும் தூய்மை பாரத இயக்கம்-II இன் கீழ் ஒருங்கிணைந்து மேற்கொள்ளலாம்.

5. திடக்கழிவு மேலாண்மை

ஒவ்வொரு குக்கிராமங்களின் திடக்கழிவுத் தணிக்கையானது வாரத்தின் ஒரு நாள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் (மொத்தம் இரண்டு நாட்கள்) மேற்கொள்ளப்படும். இந்த இரண்டு நாட்களில், அனைத்து வீட்டு, வணிக மற்றும் நிறுவன கழிவுகளும் சேகரிக்கப்பட வேண்டும், மக்கும், மறுசுழற்சி செய்யக்கூடிய, மறுசுழற்சி செய்ய முடியாத, சுகாதார மற்றும் பிற கழிவுகள் என்று வகைப்படுத்தி எடை போடப்பட வேண்டும்.

மொத்த கழிவு உருவாக்குபவர், உணவு கழிவு உருவாக்குபவர், தொழிற்சாலை கழிவு உருவாக்குபவர் என வகைப்படுத்தி ஊராட்சித் தீர்மானத்தின்படி குடியிருப்பு அல்லாத வகைகளுக்கு சிறப்பு மாதாந்திர கட்டணம் விதிக்கப்பட வேண்டும். மேற்கூறிய

Verified © RedEstate™

பல்வேறு செயலாக்கம் / மறுசுழற்சி / கையாளுதல் / அகற்றுவதற்கான உட்கட்டமைப்பு பணிகள் தூய்மை பாரத இயக்கம்-II மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் எடுத்துக் கொள்ளப்படலாம்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II இன் கீழ் எடுக்கப்படக்கூடிய பணிகள்:

1. **திடக்கழிவு மேலாண்மை (SWM) செயல்பாடுகளை வலுப்படுத்தும் பணிகள்:**

திடக்கழிவு மேலாண்மை தொடர்பான பின்வரும் நடவடிக்கைகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II இன் கீழ் தேர்வு செய்யலாம்:

அ. தூய்மை பாரத இயக்கம்-II மற்றும் 15வது மத்திய நிதிக்குழு மானியத்தின் கீழ் கிராம ஊராட்சிக்கான நிதியுதவி முடிந்துவிட்டால், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II இன் கீழ் குக்கிராமங்களில் ஏதேனும் ஒன்றில் கூடுதல் பிரித்தெடுக்கும் கொட்டகை / மண்புழு கொட்டகை கட்டப்படலாம்.

ஆ. திடக்கழிவு மேலாண்மையில் எந்தவொரு புதிய நிறுவனமும் SWM அலகுக்கு வருமானம் ஈட்டக்கூடிய பண்ணைத் தோட்டம் அல்லது சமுதாயத் தோட்டத்தை அமைப்பதன் மூலம் ஒருங்கிணைந்த அணுகுமுறையில் திட்டமிடப்பட வேண்டும்.

இ. பிளாஸ்டிக் சாலைகளுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் பிற நிறுவனங்களுடனான பைபேக் (திரும்ப பெறும்) ஒப்பந்தத்துடன் நெகிழி துகளாக்குதல் மற்றும் சேமித்த துகள்களை விற்பனை செய்யும் அலகும் நிறுவலாம். அத்தகைய ஒவ்வொரு அலகும் நெகிழியை திரும்பப்பெறும் மையமாக செயல்பட வேண்டும். அங்கு குவிக்கப்பட்ட நெகிழிகளை பொதுமக்கள் விற்கலாம்.

ஈ. நீர்நிலை/சாலைகள் / தெருக்கள் போன்றவற்றின் அருகே கவனிக்கப்படாமல் குப்பை குவிந்துள்ள கிராம ஊராட்சியில் முறையாக இயக்குநரகத்தின் முன் அனுமதியுடன் ஒருமுறை சுத்தம் செய்யலாம்.

உ. நகர்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளின் தேவைகள் அல்லது நகர்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளின் தொகுப்பில் சுகாதாரமான முறையில் நிரப்புதல், ஏற்கனவே உள்ள நிலத்தை பயோ-மைனிங் செய்தல் போன்றவையும் தூய்மை பாரத இயக்கம்-II உடன்

Verified by RealEstate

இணைந்து பகுதியின் தேவைகளின் அடிப்படையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II இன் கீழ் மத்திய நிதிக்குழு நிதியுதவியுடன் இணைந்து எடுக்கப்படலாம்.

2. சாம்பல் நீர் மேலாண்மை (GWM) வசதிகள்:

அ. கழிவு நீர் அல்லது சுத்திகரிக்கப்பட்ட நீரைச் சேகரித்தல்/ நீரோட்டம் செல்ல வேண்டிய அவசியம் இருந்தால், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II இன் சுகாதாரக் கூறுகளின் கீழ், அதை முறையான அகற்றல் கிடைக்கப்பெறும் பட்சத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

ஆ. கிராம ஊராட்சியில் உள்ள நீர்நிலைகளில் சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் வராமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, GWM அமைப்புகளை நீர்நிலைகளுக்கு அருகில் அல்லது கழிவு நீர் உற்பத்தியின் மூலத்தில், தூய்மை பாரத இயக்கம்-II (ஊரகம்) மற்றும் 15 வது நிதிக்குழு மானியத்துடன் அல்லது தனித்தனியாக திட்டமிடலாம்.

இ நீரின் மறுபயன்பாட்டை ஊக்குவிக்கும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II இன் கீழ் ஒரு முழுமையாக ஏற்படுத்துதல் வேலையாக அல்லது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் உடன்கட்டமைக்கப்பட்ட ஈரநிலம் / வடிகட்டிகள் போன்ற புதுமையான மாதிரிகள் ஒன்றிணைந்து எடுக்கலாம். மேலே கூறப்பட்ட படைப்புகளைத் தவிர, வேறு ஏதேனும் புதுமையான/வணிக மாதிரிகள் அதன் சுயவாழ்வை உறுதிசெய்வதாக இருப்பின் நீர் பிறகு கழிவு மேலாண்மையின் கீழ் அப்பணியை எடுக்கலாம். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II இன் கீழ் தூய்மை மற்றும் கழிவு மேலாண்மை நடவடிக்கைகளுக்காக உருவாக்கப்பட்ட வசதிகள் அந்தந்த கிராம ஊராட்சியின் சொத்துகளாகும். தொடர்ந்து பராமரிப்பு பணிகளை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி மேற்கொள்ளலாம். மேற்கூறிய அனைத்துப் பணிகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சியில் செறிவூட்டல் முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் கிராம சுகாதார செறிவூட்டல் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க

Verified by RealEstate™

வேண்டும். மொத்த ஒதுக்கீட்டில் இருந்து, 10% நிதியை பசுமை மூடி மற்றும் தூய்மை பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும்.

6.6 வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை ஒருங்கிணைத்தல்:

6.6. அ. சந்தைகள் / கிராம விற்பனை கூடங்கள் / மீன் சந்தைகள் / சேமிப்பு கிடங்கு:

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்த, சந்தைப்படுத்தல் வசதிகளான சந்தைகள்/ கிராம விற்பனை கூடம் / மீன் சந்தைகள் / சேமிப்புக் கிடங்கு போன்றவை அவசியம். ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு சொந்தமான கிராம சந்தைகள், கிராம விற்பனை கூடங்கள், மீன் சந்தைகள் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம். கிராமப்புற சந்தைகள், விற்பனைக் கூடம் மற்றும் மீன் சந்தைகளில் தகர கொட்டகைகள், சிமெண்ட் தளம், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள் (ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக), பேவர் பிளாக் நடைபாதை போன்ற அடிப்படைக் கட்டமைப்புகள் வழங்கப்படலாம்.

வேளாண்மை விளைபொருட்கள் மற்றும் தோட்டக்கலைப் பொருட்களுக்கான சேமிப்பு கிடங்கு தேவையான இடங்களில், சம்பந்தப்பட்ட துறையுடன் தேவையை உறுதிசெய்த பிறகு கட்டப்படலாம்.

புதிய சந்தைகள் / கிராம விற்பனை கூடங்கள் / மீன் சந்தைகள் கட்டுவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண். 3 (ஊரக வளர்ச்சி துறை (சி4) துறை) நாள்: 4.7.2021ல் குறிப்பிட்ட விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

6.6. ஆ. கதிரடிக்கும் களம் / மீன் உலர்த்தும் முற்றம்:

2001-2006 ஆம் ஆண்டில், அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஒரு கிராம ஊராட்சிக்கு ஒன்று வீதம் கதிரடிக்கும் களம் கட்டப்பட்டது. விவசாய விளை பொருட்கள், மீன்வளப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த, கதிரடிக்கும் களம், மீன் உலர்த்தும் முற்றம் ஆகியவை தேவைப்படும் இடங்களில் இத்திட்டத்தின் கீழ் கட்டப்படலாம்.

6.6. இ. தனிநபர் வாழ்வாதார ஆதரவு:

சுய உதவிகுழு குடும்பங்கள் / சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் வருமான ஆதாரங்களை பெருக்குவதை ஊக்குவிக்க, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ், கைவினைஞர் பணிமனைகள், காளாண் வளர்ப்பு கொட்டகைகள், பட்டு வளர்ப்பு கொட்டகைகள், பால் கொள்முதல் நிலையங்கள் போன்ற வாழ்வாதாரம் தொடர்பான

Verified © RealEstate

உட்கட்டமைப்புகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை / தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம் / வேளாண் துறை / தோட்டக்கலைத் துறை / பட்டு வளர்ப்புத் துறை மற்றும் கால் நடைத் துறை ஆகியவற்றின் கூட்டு தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் கட்டப்படலாம்.

மேற்கூறிய கூறுகளை மேற்கொள்வதற்கு ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

மொத்த ஒதுக்கீட்டில் இருந்து, 10% நிதியை மேற்கண்ட பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டும்.

7. பணிகள் தேர்வு / கூர்ந்தாய்வு / நிர்வாக அனுமதி / தொழில்நுட்ப அனுமதி/ஒப்பந்தப்புள்ளிகள்/தகவல் பலகைகள் மற்றும் சுவர் ஓவியங்கள்:

7.1 பணிகள் தேர்வு செய்தல்:

கிராம ஊராட்சிகளில் தேர்வு செய்யப்பட வேண்டிய பணிகள் குறித்து கீழ்கண்ட உறுப்பினர்கள் அடங்கிய ஒன்றிய அளவிலான குழு இறுதி செய்யலாம்.

அ) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்)

ஆ) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சிகள்)
(ஊராட்சி ஒன்றிய சொத்துகளுக்கும்/சிறுபாசன ஏரிகளுக்கும்).

இ) உதவிப்பொறியாளர் / ஒன்றிய பொறியாளர்

ஈ) சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்

உ) சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி தலைவர்

இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பணிகள் இதற்கென கூட்டப்படும் சிறப்பு கிராம சபையில் ஒப்புதல் பெறப்பட வேண்டும். நிர்வாக அனுமதி வழங்கவேண்டிய கருத்துருக்களை ஊராட்சி வாரியாக தயாரித்து மேற்கண்ட ஒன்றிய அளவிலான குழுவினரால் கையொப்பமிட்டு கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பப்பட வேண்டும். நிர்வாக அனுமதிக்காக தயாரிக்கப்பட்ட கருத்துருவினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பி வைப்பதற்கு முன் உதவிப்பொறியாளர் (ஊ.வ.) / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆகியோரால் 100% கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

7.2 பணிகள் ஆய்வு / பணிகள் அனுமதி:

மாவட்ட ஆட்சியர்கள், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II இன் கீழ் (AGAMT-II) நிர்வாக அனுமதிக்கான கருத்துருவினை பெற்றவுடன், தேர்வு செய்யப்பட்ட பணிகளின் தேவை, உண்மை நிலை

Verified by RealEstate™

மற்றும் மதிப்பீடுகளின் சரித்தன்மை ஆகியவற்றை சரிபார்க்க உரிய அலுவலர்களை நியமிக்க வேண்டும். 100% ஊரக நீர்நிலைப் பணிகளையும், 50% இதர ஒருங்கிணைப்புப் பணிகளையும் மாவட்ட ஆட்சியர்கள் நேரடியாக கள ஆய்வு செய்ய வேண்டும். மீதமுள்ள பணிகளுக்கு, நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன் குறைந்தபட்சம் 5% பணிகளை மாவட்ட ஆட்சியரே ஆய்வு செய்ய வேண்டும். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை குறைந்தது 10% பணிகளையும், செயற்பொறியாளர் (ஊ.வ) குறைந்தது 25% பணிகளையும் சரிபார்க்க வேண்டும். உதவி செயற் பொறியாளர் (ஊ.வ) / மண்டல அலுவலர்கள் மற்றும் பிற உதவி இயக்குநர் நிலை அலுவலர்கள் குறைந்தபட்சம் 50% பணிகளை நேரடியாக கள ஆய்வு செய்து மதிப்பீடுகளின் சரித்தன்மையை சரிபார்க்க வேண்டும். எனவே. இத்திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட அனைத்துப் பணிகளையும் 100% மேலாய்வு செய்த பின்னரே மாவட்ட ஆட்சியர்கள் நிர்வாக அனுமதி வழங்க வேண்டும்.

மாவட்ட ஆட்சியர், வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனைத்து கூறுகளிலும், எவ்வித விடுதலுமின்றி பணிகள் எடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி)/ திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் செயற்பொறியாளர் அவர்களுடன் கலந்தாலோசித்து, மாவட்ட ஆட்சித்தலைவர், முக்கிய தேவையின் அடிப்படையில், ஒரு கூறில் குறையும் பணிகளை, மற்றொரு கூறு பணிகளில் அதற்கான காரணங்களுடன் கூடிய செயல்முறைகளை வெளியிட்டு எடுக்கப்படலாம்.

7.3 நிர்வாக அனுமதி அளித்தல்:

மாவட்ட ஆட்சியர் மேலே உள்ள பத்தி 7.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 100% மேலாய்வு செய்த பின்னர் நிர்வாக அனுமதி வழங்க வேண்டும்.

7.4 தொழில்நுட்ப அனுமதி:

அரசாணை (நிலை) எண். 203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள்.20.12.2007, தமிழ்நாடு ஊராட்சிகளில் திருத்தம் (பணிகளுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களின் முறை மற்றும் நிபந்தனைகள்) ஆகியவற்றின் படி தகுதிவாய்ந்த அலுவலர் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட வேண்டும். விதிகள் 2007 மற்றும் அரசாணை எண். 54 (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.1) துறை), நாள் 22.5.2014.

7.5 ஒப்பந்தப்புள்ளி கோருதல்:

1. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் பணிகள் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற

ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் அதன் விதிகள், 2000 ஆம் ஆண்டு ஆகியவற்றைப் பின்பற்றி தமிழ்நாடு ஊராட்சிகளில் அறிவிப்பு-II இன் அட்டவணை-II (திட்டங்கள் தயாரித்தல் மற்றும் வேலைகளின் மதிப்பீடு மற்றும் முறை மற்றும் ஒப்பந்தங்களின் நிபந்தனைகள்) விதிகள், 2007 இல் மற்றும் அரசாணை எண்.203, (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை) நாள் 20.12.2007 ஆகியவை பின்பற்றப்பட வேண்டும்.

2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அனைத்துப் பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அதிகாரியாக இருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், ஏற்பதற்கும் அரசாணை நிலை எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா-1) துறை, நாள் 20.12.2007ல் விவரிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.
3. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் - II இன் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளுக்கும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் முறை பின்பற்றப்பட வேண்டும்.

7.6 தகவல் பலகைகள் மற்றும் சுவர் விளம்பரங்கள்:

இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் விவரங்கள் மற்றும் மதிப்பீடுகள் கொண்ட தகவல் பலகைகள் அனைத்து குக்கிராமங்களிலும் நிறுவப்பட வேண்டும். ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் மக்கள் அதிகளவில் கூடும் 5 முக்கிய இடங்களில் சுவர் விளம்பரங்கள் எழுதப்பட வேண்டும்.

8. எடுக்கக்கூடாத / தடைசெய்யப்பட்ட பணிகள்:

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் பின்வரும் பணிகளை எடுத்து செய்யக்கூடாது.

1. பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட மத்திய, மாநில அரசுத்துறைகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள்/சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல் (விதிவிலக்காக இந்த வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பாக அனுமதிக்கப்பட்டவை தவிர)
2. அனைத்து வகையான புதுப்பித்தல், பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளுதல்.
3. அனைத்து அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குதல்.
4. அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதி பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்காக எவ்வித பணியும் மேற்கொள்ளுதல்.

Verified @ RealState

5. தனிநபர்கள்/குடும்ப நலன்களுக்கான சொத்துக்கள் உருவாக்குதல்.
6. அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்.
7. மாணியம் மற்றும் கடன், மத்திய மற்றும் மாநில/ யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.
8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத்தொகை வழங்குதல்
9. முழுமையாக முடிக்கப்பட்ட அல்லது பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகையினை மீளச் செலுத்துதல்.
10. அனைத்து வருவாய் மற்றும் தொடர் செலவினங்கள்.
11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களின் பயன்பாட்டில் இருக்கும் அல்லது சொந்தமான நிலங்களில் பணிகள் (விதிவிலக்காக இந்த வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பாக அனுமதிக்கப்பட்டவை தவிர)
12. சரளை/கற்சாலைகள் (தார் சாலைகள் அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுக்கப்பட வேண்டும்).
13. சோடியம் ஆவி விளக்குகள் / உயர் கம்ப மின் விளக்குகள் /அடர் குறு விளக்குகள் / குழல் விளக்குகளை நிறுவுதல்.

9. நிதி விடுவிப்பு:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால், இயக்ககத்தில் ஒற்றை சாளர கணக்கு பராமரிக்கப்பட்டு அனைத்து பரிவர்த்தனைகளும் ஒற்றை சாளர கணக்கு மூலமே செயற்படுத்தப்படும்.

10. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பிற திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்.

1.) குடிநீர் வழங்குதல்
2.) வீட்டுவசதி
3.) கிராம ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சொத்துக்களை கணினிமயமாக்குதல்
4.) விரிவான வாழ்வாதார நடவடிக்கைகள்
5.) சாலைகள்

10.1 குடிநீர் வழங்குதல்:

ஊரக குடியிருப்புகளுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதே அரசின் முக்கிய குறிக்கோளாகும். ஜல் ஜீவன் மிஷன் (JJM) மற்றும் 15வது நிதிக் குழு மூலம் அனைத்து ஊரக குடும்பங்களுக்கு (Functional Household Taps) தனிநபர் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும். மேற்கண்ட திட்டங்களின் கீழ் தேவையான நீர் ஆதாரங்களும்

Verified by RealEstate

உருவாக்கப்பட வேண்டும். இந்த ஊராட்சிகளுக்கு நீர் ஆதாரம் மற்றும் பயன்பாட்டு அறிக்கை (Water Budget) தயாரிக்கப்பட வேண்டும்.

10.2 வீட்டுவசதி:

அனைத்து குடும்பங்களுக்கும் நிரந்தர வீடு வழங்குவது இவ்வரசின் தலையாய குறிக்கோளாகும். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊராட்சிகளில் உள்ள அனைத்து வீடற்ற குடும்பங்களுக்கும் அரசின் திட்டங்கள் மூலம் வீடுகள் வழங்க மாவட்ட நிர்வாகம் அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும். நிலமற்ற குடும்பங்களுக்கு நிலம் வழங்க வருவாய்த் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

10.3 கிராம ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சொத்துக்கள் மற்றும் நீர் நிலைகளை கணினி மயமாக்குதல்.

கிராம ஊராட்சியால் பின்வரும் சொத்துக்கள் கணினி மயமாக்கப்பட வேண்டும்.

1. கிராம ஊராட்சிகளுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்கள்
2. கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான நிலங்கள்
3. கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியத்தின் மற்ற அனைத்து சொத்துக்கள்
4. கிராம சபையில் தீர்மானம் நிறைவேற்றி தெரு / குக்கிராம பெயர்களிலுள்ள சாதிப் பெயரை நீக்க வேண்டும்.

10.4 விரிவான வாழ்வாதார நடவடிக்கைகள்:

- மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி கூட்டமைப்பு, கிராம ஊராட்சி வறுமை ஒழிப்புக் குழு போன்ற சமுதாய அடிப்படையிலான அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் சுய உதவி குழு உருவாக்கத்தில் செறிவு நிலையை அடைதல்.
- சமுதாய அடிப்படையிலான அமைப்புகளை அவர்களே நிர்வகிப்பதற்கு முறையான பயிற்சி அளிக்கபட வேண்டும்.
- அனைத்து சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II ஊராட்சிகளில் மின்-புத்தகப் பராமரிப்பைப் பின்பற்ற வேண்டும்.
- பெரும்பான்மையான சுய உதவி குழுக்களின் வாழ்வாதார நடவடிக்கையை மேம்படுத்த வருமானம் ஈட்டும் தொழில்களில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

Verified RedEstone

- தேவைகளின் அடிப்படையில், இந்த கிராம ஊராட்சிகளில் குறைந்தது 10 நபர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.
- குறைந்தது 10 பிளம்பர் / மின்பணியாளர் / தச்சர் / கொத்தனார்களுக்கு பயிற்சி வழங்கப்பட வேண்டும்.
- குறைந்தது 10 சுய உதவிக் குழு முனைவகங்கள் உருவாக்கப்பட வேண்டும்.
- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் / தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் (TNRTP) ஆகியவற்றின் அனைத்து வாழ்வாதார நடவடிக்கைகளும் செறிவு நிலையை அடைய வேண்டும்.
- பயிற்சி பெற்ற இளைஞர்களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கான MIS (தகவல் மேலாண்மை திட்டம்) கிராமங்களில் செயல்படுத்தப்பட வேண்டும்.
- தகுதியுள்ள அனைத்து சுய உதவிக்குழுக்குளுக்கும் வங்கி கடன்கள் வழங்கப்பட வேண்டும் மற்றும் காலம் கடந்த மற்றும் NPA கணக்குகள் 6 மாதங்களில் 50% ஆகவும் ஒரு வருட காலத்தில் 100% ஆகவும் குறைக்கப்பட வேண்டும்.
- அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும் தனிப்பட்ட PMJDY (பிரதமரின் ஜன்தன் யோஜனா) வங்கிக் கணக்குகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- ஆயுள் மற்றும் விபத்துக் காப்பீட்டுத் திட்டங்கள் உரிமைகோரல் தீர்வு வழிமுறையுடன் அனைவரையும் சென்றடைய உறுதி செய்ய வேண்டும்.

10.5 சாலைகள்:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் / பிரதமரின் கிராம சாலைகள் திட்டம் / தமிழ்நாடு கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் / தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான வங்கி மற்றும் பிற மாநில மற்றும் மத்திய திட்டங்களின் கீழ் சாலைப் பணிகளை மேற்கொள்ளும்போது, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

11. பிற துறைகளுடன் ஒருங்கிணைத்தல்.

11.1 மாற்றுத் திறனாளிகள் நலத்துறை:

- இந்த ஊராட்சிகளில் தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் மாற்றுத்திறனாளிகள் சான்றிதழ்கள் (தேசிய அட்டைகள்) செறிவு நிலை அடையும் முறையில் வழங்கப்பட வேண்டும்.

Verified by RedEstate

- தகுதியுள்ள மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான சிறப்பு சாதனங்களும் வழங்கப்பட வேண்டும்.
- தேவைப்படும் இடங்களில், 0 முதல் 6 வயதுக்குட்பட்ட சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகளுக்கான (CWSN) ஆரம்பகால தலையீட்டு மையங்கள் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

11.2 வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை:

வேளாண்மைத் துறையில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்துடனான (KAVIADP) பணி தேர்வில் புவியியல் ரீதியாக முழுமையான ஒருங்கிணைப்பு இருக்கவேண்டும். கிராம ஊராட்சி / ஒன்றியம் / மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு செய்யப்பட வேண்டும். வேளாண் துறை / தோட்டக்கலை துறை/ கால்நடை பராமரிப்பு துறை / வேளாண்மை பொறியியல் துறைகளால் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II கிராம ஊராட்சிகளில் மேற்கொள்ள முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

11.3. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை:

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊராட்சிகளுக்கு அகண்ட அலைவரிசை மற்றும் கம்பியில்லா தகவல் பரிமாற்ற நுட்ப (WI-FI) வசதிகளை வழங்க தகவல் தொழில்நுட்பத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV), கிராம ஊராட்சி வறுமை ஒழிப்பு சங்கங்கள் (VPRC), கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் (PLF) மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) மூலம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பொது சேவை மையங்கள் அமைக்கப்படும்.
- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் கல்வித் துறையுடன் இணைந்து குடிமக்களுக்கு மின்னணு எழுத்தறிவு வழங்கப்படலாம்.
- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II செயல்படுத்தப்படும் ஊராட்சிகளில் 100% இணைய வழி மற்றும் கைபேசி இணைய வசதி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

11.4 சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை துறை:

- போஷான் அபியான் திட்டத்தின் கீழ், 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு (குன்றுதல்/விரயம்) கணிசமாகக் குறைப்பது மற்றும் பருவப் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கூடுதல் ஊட்டச்சத்தை வழங்குவது முதன்மையான பணியாகும். பெண்கள்

Verified © RedFlate ™

மற்றும் பெண் குழந்தைகளிடையே இரத்த சோகையின் பரவலைக் குறைப்பது மற்றொரு நோக்கமாகும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊராட்சிகளில் மேற்கொண்ட நோக்கங்களை அடைவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. நுண்ணூட்டச் சத்துக்கள் கொண்ட கீரைகள் மற்றும் பிற பயிர்களை பயிரிடவதற்கு ஊட்டச்சத்து பண்ணைகள் அமைத்தல்.
2. மத்திய/மாநிலத் திட்டங்களின் கீழ் அனைத்து மதிய உணவு மையங்களுக்கும் சமையலறை கூடங்கள் கட்டப்பட வேண்டும்.
3. அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் கட்டடம் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

- குழந்தை தொழிலாளர் அற்ற மற்றும் குழந்தை திருமணத்தை முழுவதுமாக தடுத்து குழந்தை நேய ஊராட்சிகளாக இவ்வூராட்சிகள் மாறுவதை உறுதி செய்ய வேண்டும்.
- மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மற்றும் காவல்துறை அதிகாரிகளுடன் இணைந்து சுயஉதவி குழுக்களை பயன்படுத்தி "போக்சோ" சட்டம் பற்றிய விழிப்புணர்வு இக்கிராம ஊராட்சிகளில் ஏற்படுத்தப்படும்.

11.5 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை:

- முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்ற விதவை ஓய்வூதியம், ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டங்கள் போன்ற அனைத்து சமூகப் பாதுகாப்புத் திட்டங்களும், தகுதியுடைய அனைத்து நபர்களுக்கும் செறிவு நிலை அடையும் வகையில் வழங்கப்படும்.
- தகுதியுள்ள ஒவ்வொருவருக்கும் அரசால் வழங்கப்படும் வசதிகள் வழங்கப்பட வேண்டும்.
- பழங்குடியின சான்றிதழ்கள் தகுதியுள்ள பழங்குடியினருக்கு 100% அவரவர் இருப்பிடங்களிலேயே வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.
- தகுதியுள்ள அனைத்து நிலமற்ற மக்களுக்கும் வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும்.
- ஒன்றிய மற்றும் மாநில அரசின் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (தொழிலாளர் நல வாரியங்கள் உட்பட) செறிவு நிலை அடையும் வகையில் மேற்கொள்ளப்படும்.

Verified © RealEstate™

11.6. கால்நடை பராமரிப்பு/பால்வளத்துறை:

- சிறந்த மேலாண்மை நடைமுறைகள் மற்றும் பால் கொள்முதல் முகமைகளுடன் நன்கு திட்டமிடப்பட்ட இணைப்புகள் மூலம் கால்நடை வளர்ப்பு அடிப்படையிலான வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்.
- ஆடுகளின் எண்ணிக்கை அதிகம் உள்ள ஊராட்சிகளில் சந்தைக் கண்காட்சிகளை நடத்துதல், சிறப்பு முயற்சிகளை நிறுத்துதல், குடற்புழு நீக்கம், தாது உப்பு கட்டி பயன்படுத்துதல் போன்ற சிறந்த ஆடு வளர்ப்பு உத்திகள் ஊக்குவிக்கப்படலாம். சாத்திய கூறுகள் உள்ள இடங்களில் ஆட்டுச் சந்தைகள் ஏற்படுத்தலாம்.
- தீவன கிடங்குகள் அமைத்தல்.
- கால்நடை சுகாதார வசதிகளை நிறுவி பயன்படுத்துதல்.
- பால் உற்பத்தியாளர் சங்கங்கள் இல்லாத பால் கறவை பகுதிகளில் இச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் மூலம் கொள்முதல் செய்வது உறுதி செய்யப்பட வேண்டும்.
- சிறிய அளவிலான பால் பதப்படுத்துதல் மற்றும் பால் பொருட்களை சந்தைப்படுத்துதல் ஆகியவை ஊக்குவிக்கப்படலாம்.

11.7. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II (AGAMT-II) ஊராட்சிகளின் கடலோரப் பகுதிகளில் மீன் விற்பனைச் சங்கங்கள் நிறுவப்படலாம்.
- படகு, இயந்திரம் மற்றும் மீனவர்களின் பிற உடைமைகளுக்கு காப்பீடு வழங்க முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.
- செயலாக்க காலத்தில் கரை (on-shore) வசதிகள் செறிவு நிலை அடையும் முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏலக் கூடங்கள், மீன் வலை பின்னும் கூடங்கள், மீன் உலர்த்தும் முற்றங்கள் மற்றும் துறைமுக சரக்குத் தளம் போன்ற வசதிகள் மற்றும் கரையோர (off shore) வசதிகள் தேவையின் அடிப்படையில் ஏற்ப்படுத்தப்படலாம்.
- பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படும் எல்லா இடங்களிலும் ரோஹு, GIFT, திலாப்பியா போன்ற உள்நாட்டு மீன்கள் வளர்ப்பதை ஊக்குவிக்க வேண்டும்.
- மீன்வள பல்கலைக்கழகம் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்கள் (KVK) மூலம் மீன் காட்சியகம் மற்றும் அலங்கார மீன் வளர்ப்பிணை ஊக்குவிக்கலாம்.

Verified @ RealEstate

11.8 மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை:

- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- அனைவருக்கும் தடுப்பூசி பாதுகாப்பு (Vaccination).
- 100% தொற்றாத நோய் (NCD) கணக்கெடுப்பு மற்றும் தொடர் கண்காணிப்பு செய்யப்பட வேண்டும்.
- 100% நோய் எதிர்ப்பு திறனூட்டல் (Immunization).
- 100% பிரசவங்கள் மருத்துவ மனைகள்/மையங்களில் (Institutional Delivery) நடைபெறுவதை உறுதி செய்தல்.

11.9 பள்ளிக் கல்வித் துறை:

- ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 100% சேர்க்கை.
- 10 ஆம் வகுப்பு வரை பூஜ்ஜிய இடைநிற்றல் உறுதி செய்யப்பட வேண்டும்.
- பத்தாம் வகுப்பில் குறிப்பாக 100% பெண் குழந்தைகள் தக்கவைப்பு.
- ஒவ்வொரு ஆரம்ப / நடுநிலை பள்ளியிலும் ஸ்மார்ட் வகுப்பறை அமைத்தல்.
- 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் 100% தேர்ச்சி.
- குழந்தைகளின் கற்றல் விளைவுகளை மொழி மற்றும் எண்கணித திறன்களில் அளவிட வேண்டும்.

11.10 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை:

- நேரு யுவகேந்திராவுடன் இணைந்து ஊராட்சிகளுக்கான ஊராட்சி, ஒன்றிய மற்றும் மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளை நடத்துதல்.
- மாநில அளவிலான விளையாட்டுப் போட்டியும் நடத்தப்படலாம்.
- அனைத்து கிராம ஊராட்சிகளில் யோகா பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும்.

11.11. சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத்துறை:

- அவ்வூராட்சியின் தனித்துவம், வரலாற்று பெருமை மற்றும் பண்பாட்டினை உணரும் வண்ணம் அதனின் வரலாறு, இயற்கை மற்றும் கலாச்சார பாரம்பரியம் பற்றி ஆவணப்படுத்தப்பட வேண்டும்.
- கிராம சபையில் ஊராட்சியின் முக்கிய வரலாற்று நிகழ்வுகள், திருவிழாக்கள் மற்றும் பண்டிகைகள், பாரம்பரிய நிகழ்வுகள், சுதந்திர போராட்ட வீரார்களின் பிறந்த நாள் விழாக்கள், மதசார்பற்ற ஆளுமைகளின் முக்கியத்துவங்கள் போன்றவைகள்

Verified by RealEstate ™

பட்டியலிடப்பட வேண்டும். மேலும் கிராம சபையில் ஊராட்சி தீர்மானத்துடன் ஊராட்சி தினம் கொண்டாடப்பட வேண்டும்.

- ஊராட்சி தின விவரம் மற்றும் ஊராட்சி தினத்தன்று கொண்டாடப்பட வேண்டிய நிகழ்வுகள் தகவல் பலகையில் பொறிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் இத்தினமானது கலை நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட வேண்டும்.

11.12. வங்கி மற்றும் அஞ்சல் நிலையங்கள்

- முன்னோடி வங்கி மேலாளர் வங்கி வசதிகள் இல்லாத பகுதிகளை கண்டறிந்து வங்கி கிளைகள்/வங்கி முகவர் (Banking Correspondent) மூலம் தேவையான வங்கி வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.
- எங்கெல்லாம் வங்கி முகவர்கள் (Banking Correspondent) சேவைகள் இருக்கின்றதோ அவை போதுமான அளவு இருக்கின்றதா என்பதை சரிபார்த்து தேவைப்படின் கூடுதல் வங்கி முகவர்களை ஈடுபடுத்தலாம் (குறிப்பாக தொலைதூர குக்கிராமங்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக).
- UIDAI (ஆதார்) அட்டைகளுக்கான பதிவு முகாம்கள் தேவைப்படும் இடங்களில் நடத்தப்பட வேண்டும்.
- பொது விநியோக முறையின் (PDS) அந்தியோதய அன்ன யோஜனா (AAY) விவரங்களின் படியும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன TIPPS தரவுத் தளத்தின் படியும் அனைத்து முன்னுரிமை குடும்பங்களுக்கும் 100% நிதிச் சேர்த்தல் (வங்கி கணக்குகள், ஆயுள் மற்றும் விபத்துக் காப்பீடு, சிறுகடன்).
- அமைப்புசாரா தொழிலாளர்களை ஓய்வூதியம் மற்றும் காப்பீடு திட்டங்களின் கீழ் கொண்டு வர வேண்டும்

11.13. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை:

- பழங்குடியின சான்றிதழ்கள் தகுதியுள்ள பழங்குடியினருக்கு 100% அவரவர் இருப்பிடங்களிலேயே உரிய காலத்திற்குள் வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.
- ஒவ்வொரு ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடும்பம்/குடும்ப உறுப்பினர்களும் தகுதிக்கு ஏற்ப ஆதார் அட்டை, முதியோர் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், பொது வழங்கல் திட்ட ஸ்மார்ட் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றை வைத்திருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

Verified by RealEstate ™

11.14. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை

- முத்ரா கடன் திட்டம், "நீட்ஸ்", 'ஸ்டாண்ட் அப் இந்தியா' மற்றும் பிரதம மந்திரி வேலை வாய்ப்பு திட்டம் (PMEGP) போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் ஒவ்வொரு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II (AGAMT-II) ஊராட்சியிலும் குறைந்தது மூன்று தொழில் முனைவோரை உருவாக்குதல்.

11.15 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை:

- அந்தியோதய அன்ன யோஜனா (AAY) அட்டைகள் மற்றும் பொது விநியோக முறையின் (PDS) ஸ்மார்ட் அட்டைகள் 100% சரிபார்ப்பு செய்யப்பட வேண்டும்.
- சாத்தியமான இடங்களில் குறைந்தபட்சம் 10% புதிய உறுப்பினர்களை முதன்மை வேளாண்மைக் கடன் சங்கங்களில் (PACS) சேர்க்க வேண்டும்.
- நில மேம்பாடு மற்றும் பிற வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு குறைந்தபட்சம் 10% நடுத்தர மற்றும் நீண்ட கால கடன்கள் வழங்கப்பட வேண்டும்.
- கூட்டுறவு சங்க கடன்களை 100% திருப்பிச் செலுத்துவதை உறுதி செய்தல் வேண்டும்.

11.16. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II (AGAMT-II) ஊராட்சிகளிலும் குழந்தைத் தொழிலாளர்கள் குறித்த தணிக்கை செய்யப்பட வேண்டும் மற்றும் 100% குழந்தைத் தொழிலாளர் இல்லாத கிராம ஊராட்சி என்ற நிலைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.
- அனைத்து அமைப்புசாரா தொழிலாளர்களும் அந்தந்த தொழிலாளர் நல வாரியங்களின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.
- கட்டுமானத் தொழிலாளர், புலம் பெயர்ந்த தொழிலாளர், நடைபாதை தொழிலாளர், வீட்டுத் தொழிலாளர், வேளாண் தொழிலாளர், மற்றும் பிற அங்கீகரிக்கப்படாத தொழிலாளர்கள் இ-ஷ்ராம் (e-SHRAM) தளத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

12. மாநில அளவிலான கண்காணிப்புக் குழு:

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II கிராமங்களில் மேலே குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு துறைத் திட்டங்கள் மற்றும் மாநில அளவிலான பல்வேறு துறை நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணிக்கவும், கீழ்க்கண்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய மாநில அளவிலான குழு ஒன்று

Verified RealEstate ™

அமைக்கப்படுகிறது. இக்குழு தேவைப்படும் போதெல்லாம் கூடும், அப்போது இத்திட்டம் நிறைவேற்றுவதில் ஏற்படும் முன்னேற்றத்தையும் இடையூறுகளையும் கவனத்தில் கொண்டு இத்திட்டத்தை நிறைவேற்றும் அமைப்புகளை வழிநடத்தும் பணியை இக்குழு மேற்கொள்ளும்.

மாநில அளவிலான கண்காணிப்புக் குழு கீழ்க்கண்டவர்களை உள்ளடக்கியது:-

தலைவர்	அரசு தலைமைச் செயலாளர்,
உறுப்பினர் செயலாளர்	அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை
உறுப்பினர்கள்	1. அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை, 2. அரசுச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. 3. வேளாண் உற்பத்தி ஆணையர் & அரசுச் செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, 4. அரசுச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, 5. அரசு முதன்மைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை 6. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் (BC), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, 7. அரசுச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, 8. அரசு முதன்மை செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, 9. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, 10. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

Verified © RealEstate™

	11. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 12. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, 13. அரசு முதன்மைச் செயலாளர், சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை, 14. அரசுச் செயலாளர், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை 15. அரசுச் செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை 16. அரசு கூடுதல் தலைமை செயலாளர், எரிசக்தி துறை, 17. அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத்துறை, 18. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW).
உறுப்பினர்/ ஒருங்கிணைப்பாளர்	ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

13. மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு:

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II ஊராட்சிகளில் மேலே குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு துறைத் திட்டங்கள் மற்றும் மாவட்ட அளவிலான பல்வேறு துறை நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணிக்கவும், கீழ்க்கண்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய மாவட்ட அளவிலான குழு ஒன்று அமைக்கப்படுகிறது. இக்குழு அரசாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு வார காலத்திற்குள் கூட்டப்பட வேண்டும், ஒன்றியம் / கிராம ஊராட்சி அளவிலான கூட்டம் அரசாணை பிறப்பிக்கப்பட்ட இரண்டு வாரங்களில் கூட்டப்பட வேண்டும். இந்தக் குழு மாதம் ஒரு முறை கூட்டப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்படும் முன்னேற்றத்தையும்

Verified © RealEstate™

இடையூறுகளையும் கவனத்தில் கொண்டு இத்திட்டத்தை நிறைவேற்றும் அமைப்புகளை வழிநடத்தும் பணியை மேற்கோள்ளும்.

மாவட்டக் குழு கீழ்க்கண்டவர்களை உள்ளடக்கியது:-

தலைவர்	மாவட்ட ஆட்சியர்
உறுப்பினர் செயலாளர்	கூடுதல் ஆட்சியர்/ திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
உறுப்பினர்கள்	1. திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் 2. மாவட்ட வருவாய் அலுவலர் 3. செயற் பொறியாளர், (ஊரக வளர்ச்சி) 4. கண்காணிப்புப் பொறியாளர் / செயற் பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் 5. கண்காணிப்புப் பொறியாளர் / செயற் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் 6. கண்காணிப்புப் பொறியாளர் / செயற் பொறியாளர் பொதுப்பணித் துறை (நீர் வளப் பிரிவு) 7. துணை இயக்குநர் (தோட்டக்கலை) 8. துணை இயக்குநர் (சுகாதார சேவைகள்) 9. இணை இயக்குநர் / துணை இயக்குநர் (கால்நடை) 10. இணை இயக்குநர் / துணை இயக்குநர் (வேளாண்மை) 11. மாவட்ட வழங்கல் அலுவலர் 12. கூட்டுறவு இணைப் பதிவாளர் 13. மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் 14. மாவட்ட தகவல் அலுவலர், NIC 15. மாவட்ட சமூக நல அலுவலர் 16. சிறப்பு துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) 17. இணை இயக்குநர், மீன்வளத்துறை 18. இணை இயக்குநர், மருத்துவ சேவைகள் 19. முதன்மை கல்வி அலுவலர் 20. திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் நல திட்டம் (ICDS) 21. மாவட்ட விளையாட்டு அலுவலர்

Verified © RealEstate ™

	22. செயற் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) 23. செயற் பொறியாளர், TAWDEVA (பணியிடம் இருப்பின்) 24. முன்னோடி வங்கி மேலாளர் 25. மாவட்ட தொழிலாளர் நல அலுவலர் 26. பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) 27. மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் 28. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

14. ஆவணப்படுத்துதல்:

இத்திட்டத்தின் பல்வேறு நிலைகளை, பணித்தேர்வு செய்வதிலிருந்து அவற்றை செய்து முடிக்கும் வரை உள்ள அனைத்து விவரங்களையும் மாவட்ட ஆட்சியர் ஆவணப்படுத்துதல் வேண்டும். பணிகள் தொடங்குவதற்கு முன்னரும், நடைபெறும் போதும் திட்டத்தால் ஏற்படும் பயன்களை காட்டும் நிழற்படங்கள், ஒளிநாடாக்கள் போன்றவை தயார் செய்வதும் இதில் அடங்கும். பயனாளிகளின் பார்வையில் இத்திட்டத்தில் உருவாக்கப்பட்ட சமுதாய சொத்துக்களை அடிப்படையாக கொண்ட வெற்றிக்கதைகள் தயார் செய்யப்பட வேண்டும். நிர்வாக செலவு, கணக்கெடுப்பு தயாரிப்பு நடவடிக்கைகள், ஆவணப்படுத்துதல் மற்றும் பிற தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC) ஆகிய நடவடிக்கைகளுக்கு மொத்த ஒதுக்கீட்டில் 2% பயன்படுத்தப்பட வேண்டும்.

15. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II விருதுகள்:

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதிலும், ஊரக வளர்ச்சி இதர திட்டங்கள் மற்றும் பிற துறைகளின் திட்டங்களின் நிதியினை ஒருங்கிணைத்து சிறப்பாக செயல்படும் மாவட்டங்களுக்கு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II இன் கீழ் விருதுகள் வழங்கப்படும். இவ்விருதிற்கான பரிசீலனையின் போது இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் வரிசை எண்.10 மற்றும் 11 இல் குறிப்பிடப்பட்ட ஒருங்கிணைப்பு நிதி பெறுதல் மற்றும் குறியீடுகள் எய்திய மாவட்டங்கள்/ ஊராட்சிகளுக்கு சிறப்பு மதிப்பெண் வழங்கப்படும்.

மாநில அளவில் சிறப்பாக செயல்படும் மூன்று மாவட்டங்கள் மற்றும் பத்து கிராம ஊராட்சிகளுக்கு விருதுகள் வழங்கப்படும்.

Verified © RedEstate™

மாவட்ட அளவில், சிறப்பாக செயல்படும் மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மூன்று கிராம ஊராட்சிகள் அங்கீகரிக்கப்பட்டு விருதுகள் வழங்கப்படும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், நிதியாண்டின் இறுதியில் இத்திட்டத்தில் உள்ள சேமிப்புத் தொகையின் அடிப்படையில் விருதுகளுக்கான தொகையை முடிவு செய்வார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருடன் கலந்தாலோசித்து, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கான-II மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான மாறுதல்களை செய்து கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

ப. செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை/நகல்//

13-6-2023
பிரிவு அலுவலர்

13/6

இணைப்பு-I

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் - II இன் கீழ் 2023 - 24 ஆண்டிற்கான குளங்கள் மற்றும் ஊருணிகள் புதுப்பிற்பதற்கான நிர்வாக வழிக்காட்டு நெறிமுறைகள்

i. **இயந்திரங்கள் பயன்பாடு:** பிறத்திட்டங்களை போல் அல்லாமல் இத்திட்டத்தில் பணிகளை முழுமையாகவும் விரைந்து முடிக்க ஏதுவாகவும் இயந்திரங்களின் பயன்பாடு அனுமதிக்கப்படுகிறது. பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் வேலை நேரங்களின் எண்ணிக்கையை கணக்கிட பதிவு புத்தகம் பராமரிக்கப்பட வேண்டும். பதிவு புத்தகமானது சம்மந்தப்பட்ட உதவிப்பொறியாளர் மற்றும் உதவிசெயற்பொறியாளர் அவர்களால் சரிபார்க்கப்பட வேண்டும் மேலும் பிற மாவட்ட அளவிலான அலுவலர்களின் ஆய்வுகளின் போது பதிவு புத்தகத்தை சரிபார்த்து சான்றளிக்க வேண்டும்.

ii. **வேலையின் வடிவமைப்பு:** அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் - II திட்டத்தின் கீழ் புதுப்பிக்கப்படும் குளங்கள் ஒரு தனித்துவமான வடிவமைப்பை கொண்டிருக்க வேண்டும். வண்டல் மண் அகற்றும் வரை குளமானது ஆழப்படுத்தப்பட வேண்டும். கனிசமான அளவு தண்ணீர் தேங்குவதை உறுதி செய்திட, குளம் / ஊருணி இருக்கும் ஆழத்தை விட குறைந்தபட்சம் 2 மீட்டர் ஆழம் தோண்டப்பட வேண்டும். மேலும், பணித்தளத்தின் மண் தன்மைகேற்ப கூடுதல் ஆழப்படுத்துவதையும் ஊக்குவிக்கலாம். குளத்தின் கரையின் அரிப்பை தடுக்கவும், மழைக்காலத்தில் வண்டல் மண்ணானது மீண்டும் குளத்தை சேராமல் தவிர்க்கவும் வண்டல் மண்ணை குளத்தின் வெளிக்கரையிலிட்டு அழுத்தி பலப்படுத்தல் (consolidation) செய்யப்பட வேண்டும்.

iii. **கால்வாய்கள் தூர்வாருதல்:** குளம் / ஊருணி தூர்வாரப்படும் போதே அவற்றை இணைக்கும் உள்/வெளி கால்வாய்களும் தூர்வாரப்பட வேண்டும். சரியான நீரோட்டத்தின் திசைக்கு ஏதுவாக உள்/வெளி கால்வாய்களின் சாய்வு விகிதம் (gradient) இருக்க வேண்டும். : குளம் / ஊருணியின் சுய தோற்றம் (original profile) பாதிக்காத வண்ணம் இயந்திரங்களை இயக்குபவர் வேலைப்பார்த்திட களபொறியாளர் அறிவுறுத்த வேண்டும்,

iv. **படித்துறை:** தேவைக்கேற்ப படித்துறையானது அதிகமாக பயன்படுத்தப்படும் கரைப்பகுதியில் அமைக்கப்பட வேண்டும். படித்துறையின் இருபுறங்களிலும் கல் பதிப்பு பணிகள்

Verified by RealEstate

மேற்கொள்ளப்படலாம். தேவைப்பட்டால் பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்படலாம். வண்டல் மண் சேருவதை தடுக்க நுழைவாயிலில் வண்டல் தடுப்பான்(silt trap) அமைக்கலாம்.

v. தடுப்புச்சுவர்: நிதியிருப்பிற்கேற்ப குளத்தின் ஒரு அல்லது பல பக்கத்தில் தடுப்புச்சுவர் உலர்ந்த கல் பதிப்பாக (random rubble masonry/rough stone dry packing) அமைக்கலாம்.

vi. பிற வசதிகள்: பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக விளக்கு வசதி மற்றும் சில கான்கீரிட் இருக்கைகள் குளத்தின் கரையில் அமைக்கப்படலாம்,

vii. கரை: குளத்தின் கரை மற்றும் நீர்பரப்பு பகுதியிலுள்ள புதர் முழுவதுமாக நீக்கப்படவேண்டும். கரையின் அடிப்பகுதியில் (toe) இருந்து 5 மீட்டர் தூரம் வரை எந்த பணிகளும் மேற்கொள்ளக்கூடாது. உடைக்கப்பட்ட மண் கட்டிகள் (Breaking clods மற்றும் sectioning the bunds) பணிகளுக்கு தனி விகிதம் பயன்படுத்தபடவேண்டும். கரையின் தரமானது கீழ்கண்டவாறு அமைக்கப்படவேண்டும் ; சாய்வு (Slope) – உள்பகுதி (Inner side) : 1.5:1

வெளிப்பகுதி (outside) :2:1

மேல் அகலம் (Top width): 2 to 3 மீட்டர்

அவசியமாக தேவைப்படும் இடங்களில் மட்டும் நிதி இருப்பைப் பொறுத்து கரையில் ஏற்படும் மண்ணரிப்பை தடுக்க, கரையின் மீது 700 GSM சணல் வலை (Geo textile coir mat)–யிட்டு அதன்மேல் இடையிடையே செடிகள் நடலாம்.

viii. உள்குளம்: வெளிகுளமானது 1 மீட்டர் ஆழத்திற்கு தோண்டபட வேண்டும். உள்குளமானது அதிலிருந்து மேலும் 1 மீட்டர் ஆழம் தோண்டப்பட வேண்டும். வகைப்படுத்தப்பட்ட ஜல்லிகள் நிரப்பப்பட்ட மீள் நிரப்பு கிணறுகள் அமைக்கலாம். கோடைக்காலங்களில் நீர் இருப்பு குறையும் போது படித்துறைக்கு நீர் வரத்து குறையா வண்ணம் உள்குளத்திலிருந்து கால்வாய் அமைக்கப்பட வேண்டும்.

ix. தண்டு முட்டு (Dead man pit): உள் மற்றும் வெளி கால்வாய்கள் தூர்வாரும் பணிகளுக்கு விரிவான ஒற்றை மதிப்பீடு தயார் செய்திட வேண்டும், அளவீடு மற்றும் மேல் அளவீடு அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு பணிகளின் ஆழத்தை சரிபார்க்க தண்டு முட்டு அமைக்கப்படவேண்டும். அளவீட்டு புத்தகத்தில் தண்டு முட்டுக்குரிய அளவீடு கழிக்கப்பட வேண்டும்/ தண்டு முட்டு அகற்றப்படவேண்டும். வண்டல் மண்ணானது மீண்டும் குளத்தை சென்றடையா வண்ணம் குளத்தின் கரையின் மேல் புறத்திலும்,

Verified RealEstate™

வெளி புறத்திலும் இட வேண்டுமே தவிர குளத்தின் உள்புறத்தில் இடக்கூடாது.

x. **எல்லை கற்கள்:** வருங்காலத்தில் ஆக்கிரமிப்புகளை தடுக்கும் வண்ணம் வருவாய் துறையின் பதிவேடுகளின்படி குளக்கரையின் வெளிபுற விளிம்பிலிருந்து எல்லை கற்கள் அமைக்கப்பட வேண்டும். ஊருணிகளில் கால்நடைகள் மேய்வதை தடுக்கும் வண்ணம், உள்ளூரில் கிடைக்கும் பொருட்கள் மற்றும் செடிகள் கொண்டு வேலி அமைக்கலாம். நீர்பிடிப்பு பகுதிகளிலிருந்து வரும் நீர் தடைப்படாத வகையில் முன் கரை எல்லையிலும் குளத்தின் கரையின் மேலும் எல்லைத் தோட்டம் அமைக்கலாம்.

xi. **வடிகட்டி அறை** (Filter Chamber): ஊருணியானது குடிநீர் சேமிப்பு அமைப்பு என்பதால் அதில் சேமிக்கப்படும் நீரினை வடிகட்டி பயன்படுத்திக்கொள்ளலாம். மண்ணின் தன்மை மணலாக இருப்பின் நீர் ஊடுவலை தவிர்க்க ஓரடுக்கு களிமண் படுக்கை அமைக்கலாம். உள்குளத்தில் வகைப்படுத்தப்பட்ட ஜல்லிகளை கொண்டு வடிக்கட்டி அறைகள் அமைக்கலாம். உள்குளத்திலுள்ள வடிக்கட்டிய நீரை வடிகால் வழியே ஊருணிக்கு வெளியேயுள்ள கிணற்றிற்கு அனுப்பி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளலாம். இப்பணியினை தேவைகேற்ப பிற திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ப. செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை/நகல்//

13-6-2023
பிரிவு அலுவலர்

13/6

Verified RealEstate

இணைப்பு-II

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் II-இன் கீழ் கிராமப்புறங்களில் உள்ள சிறுநீர்ப்பாசன ஏரிகள் (M.I. Tank) 2023-24-ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தலை செயல்படுத்துவதற்கான நிர்வாக வழிமுறைகள்:-

சிறுநீர்ப்பாசன ஏரிகளின் தேர்வு மற்றும் முன்னுரிமை

i. சிறு நீர்ப்பாசன ஏரிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு முன், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மற்றும் சம்பந்தப்பட்ட உதவிப்பொறியாளர் புதுப்பிக்கப்பட்ட சிறு நீர்ப்பாசன ஏரிகளின் பட்டியலை தயாரிக்க வேண்டும். பட்டியலில் எந்த சிறு நீர்ப்பாசன ஏரியை விடுபடாமலும், பொதுப்பணித்துறை அல்லது பிற துறைகளுக்கு சொந்தமான சிறுநீர்ப்பாசன ஏரிகள் சேர்க்கப்படவில்லை என்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

ii. இதனையடுத்து, அடிப்படை விவரங்களான சிறு நீர்ப்பாசனஏரியின் அளவு, பாசனபரப்பு, (ayacut) நீரியியல் விவரங்கள், (hydraulic) மதகுகள்(sluices) மற்றும் கலங்குகளின் (weir) விவரங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒருவிரிவான சிறு நீர்ப்பாசனஏரிகளின் நீரியியல் விபரங்கள் அடங்கிய புத்தக தொகுப்பு (Memoir) தயாரிக்கப்பட வேண்டும். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் II-இன் கீழ் முன்மொழியப்பட்ட அனைத்து சிறு நீர்ப்பாசன ஏரிகளுக்கும் Memoir அவசியம் ஆகும். Memoir-ல் சேகரிக்கப்பட்ட தகவல்களை www.tnrd.gov.in இணையதளத்தில் உள்ளீடு செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

iii. ஊராட்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட சிறுநீர்ப்பாசன ஏரிகள் இருக்குமாயின், அதிகபட்ச நீர்பரப்பு பகுதியில் உள்ள சிறு நீர்ப்பாசன ஏரிக்கு முதல் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அடுத்த முன்னுரிமை அதிக ஆயக்கட்டு/மீள்நிரப்புதிறன் கொண்ட சிறு நீர்பாசன ஏரிக்கு வழங்கப்பட வேண்டும்.

iv. ஏரிகளின் குழுமத்தில் (system or network) மேற்பகுதியில் (upstream) அமைந்துள்ள சிறு நீர்ப்பாசன ஏரிக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

v. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுநீர்ப்பாசனஏரி எந்த ஆக்கிரமிப்புகளும் இன்றி இருக்க வேண்டும். ஆக்கிரமிப்புகள் இருக்குமாயின் அவற்றை அகற்றிய பின்னரே ஏரியானது மேம்பாட்டிற்காக எடுக்கப்பட வேண்டும்.

Verified RedEStore ™

vi. கடந்த இரண்டு ஆண்டுகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் எடுக்கப்பட்ட பணிகளும் நடப்பாண்டில் எடுக்கப்பட்டுள்ள பணிகளும் நடந்து கொண்டிருந்தாலும் அல்லது நிறைவடைந்திருந்தாலும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் II-இன் கீழ் எடுக்ககூடாது.

vii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் II-இன் கீழ் முன்மொழியப்பட்ட சிறுநீர்ப்பாசன ஏரிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் 2023-24 திட்டத் தொகுப்பு (shelf of project-ல்)இருந்து நீக்கப்பட வேண்டும்.

மதிப்பீடுகள் தயாரித்தல்:

சிறுநீர்ப்பாசன ஏரிகளின் தேர்வு மற்றும் இறுதி செய்யப்பட்ட ஏரிகளின் பட்டியல் தயாரித்த பிறகு, முழுமையான கள ஆய்வுக்குப்பின் சம்பந்தப்பட்ட பொறியாளர்களால் விரிவான மதிப்பீடு தயார் செய்யப்பட வேண்டும்.

மதிப்பீடுகளைத் தயாரிக்கத் தொடங்குவதற்கு முன், ஒரு விரிவானபங்கேற்பு கிராமப்புறமதிப்பீட்டை (PRA) உள்ளூர் மக்கள் உள்ளடக்கியதாக மேற்கொள்ள வேண்டும். இப்பயிற்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), உதவிப்பொறியாளர், கிராம நிர்வாக அதிகாரி, கிராம ஊராட்சித் தலைவர், உள்ளூர் வார்டு உறுப்பினர், சுய உதவி குழு மகளிர், விவசாயிகள் சங்க உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும். நடைகுறிப்பு ஆய்வின் மூலம் (Transect walk) சிறு நீர்ப்பாசன ஏரிகளின் சுற்றளவு, தண்ணீர்பரப்பு, சிறுநீர்ப்பாசனஏரியின் கரை (Bund), மற்றும் மதகுகள் (Sluice(s) மற்றும் கலங்கு வழிந்தோடி (Weirs) இருக்கும் இடத்தில் விரிவான திட்ட அறிக்கையுடன் புகைப்படங்கள் முன்மொழிவுடன் சமர்பிக்கப்பட வேண்டும்.

மேலே உள்ள செயல்பாடுகளில் முக்கியமாக கவனிக்க வேண்டியவை:-

- சிறு நீர்ப்பாசன ஏரியின் பல்வேறு கூறுகளின் நிலைகளைப் பற்றிய முழுமையான மதிப்பீடு செய்தல்.
- சிறு நீர்ப்பாசன ஏரியின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் வகைகள்.
- புல வரைப்படத்திலுள்ள (FMB) விவரங்களின் அடிப்படையில் சிறு நீர்ப்பாசன ஏரியின் எல்லைகள் முடிவு செய்யப்படவேண்டும்.

Verified by RealEstate

- எதிர்காலத்தில் ஆக்கிரமிப்புகளை தவிர்க்கும் விதமாக சிறு நீர்ப்பாசன ஏரியின் எல்லைக்கற்கள் இட வேண்டும்.
- திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு தேவையான புல வரைப்படம் (FMB) பிறவிவரங்கள் இந்த பயிற்சியின்போது, கிராம நிர்வாக அதிகாரியிடமிருந்து சேகரிக்கப்படவேண்டும்.

PRA மூலம் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கும் அதன்பின் தொடங்கப்பட்ட நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஆவணம் செய்யப்படவேண்டும்.

PRA செயல்பாட்டுக்கு பின் Auto Levels/ Total Station போன்றவற்றைப் பயன்படுத்தி சிறுநீர்ப்பாசன ஏரியின் நிலபரப்பு ஆய்வு மேற்கொள்ள வேண்டும். முதலில் குறிப்பு அளவுகோல் (reference bench) நிறுவப்பட வேண்டும். ஏரியின் கரைமட்ட அளவு (TBL), ஏரியின் முழுகொள்ளளவு (FTL), மற்றும் ஏரியின் உச்சக்கட்ட நீரின் மட்ட அளவு (MWL) குறிக்கப்பட வேண்டும்.

நிலப்பரப்பு ஆய்வு மற்றும் விரிவான தயாரிப்பை மேற்கொள்வதற்கான மதிப்பிடு செலவுகளை திட்ட மதிப்பீட்டில் திட்டஅறிக்கையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த மதிப்பீட்டு தொகைக்கான வரம்பு இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (DRD & PR) மூலம் நிர்ணயிக்கப்படும்.

முதலில் ஏரியிலிருந்து தோண்டப்படும் வண்டல் மண்ணின் மொத்த அளவு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். ஊடுருவல் தன்மை அதிகம் கொண்ட மணல் பாங்கான ஏரியின் கொள்ளளவுக் குறையா வண்ணம், வண்டல் மண் தோண்ட படவேண்டும். சோதனை குழிகள் ஒவ்வொரு 100 மீட்டர் இடைவெளியில் நிலத்தின் அடித்தளம் வரை (Ground strata) எடுக்கப்பட வேண்டும். சிறுநீர்ப்பாசன ஏரியின் படுக்கையின் அளவு வரை, தண்ணீர் நிரம்பி இருந்தால் தோரயமான அளவீடுகளை முன்மொழிய கூடாது. தண்ணீர் வடிந்த பிறகே ஏரியின் உண்மையான அளவீடுகளை மதிப்பீடு செய்ய வேண்டும். வேலை ஆரம்பிப்பதற்கு முன் உள்ள அளவீடுகளை உதவி செயற்பொறியாளர் பணி ஆரம்பிக்கும் முன்பே சரிபார்க்க வேண்டும். தூர்வாரப்பட்டப்பின் ஏரியின் அடிமட்ட அளவு சீரான சாய்வில் (Uniform gradient) ஏரியின் முழு கொள்ளளவு விளிம்பு (FTL contour) மற்றும் மதகின் அடிமட்ட அளவு (Sluice sill level contour) இடையே இருக்க வேண்டும்.

நீர் பிடிப்பு பரப்பு முழுவதும் 10 மீ X 10 மீ கட்டத்துடன் கூடிய விளிம்பு ஆய்வு (Contour survey) மேற்கொள்ளப்பட வேண்டும். நீர்பரப்பு ஏரியின்

Verified by PeoEstate™

முழுகொள்ளளவில் ஏரிக்கரை வரை இருக்க வேண்டும். (FTL) மற்றும் நீர்பகுதியில் நீர்பரவல் பரப்பளவு முன் அளவாக இருக்க வேண்டும்.

30 மீ இடைவெளியில் ஏரியின் கரை பகுதிகளின் குறுக்கு மற்றும் நீள வாக்கு நிலைகள் (levels of the cross and longitudinal Sections) மேற்கொள்ளவேண்டும்.

தேவைகேற்ப அளவுக்கோலில் விளிம்பு வரைபடம் தயார் செய்யப்பட்டு, ஏரியின் வடிவமைக்கப்பட்ட கொள்ளளவு மற்றும் தற்போதைய கொள்ளளவு இரண்டையும் கருத்தில் கொண்டு, தோண்டப்பட வேண்டிய வண்டல் மண்ணின் அளவு கணக்கிடப்பட வேண்டும்.

இதேபோல், ஏரியின் உண்மையான குறுக்கு வெட்டினை மீட்டமைக்க தேவைப்படும் மண் வேலையின் அளவினை மதிப்பீடு செய்ய வேண்டும். மதகுகள்(sluices) மற்றும் கலங்கு வழிந்தோடி (weirs) பழுது அல்லது புனரமைப்பு, பணிகள் தேவையிருப்பின் மேற்கொள்ளலாம். கரை பாதுகாப்பு பணிகள் ஏரியின் வராலாற்றை கருத்தில் கொண்டே எடுக்கப்பட வேண்டும்.

மதகுகளின் எண்ணிக்கை, வகைகள், கரை இருக்கும் இடம் (Location of Bund), மதகின் அடிமட்ட அளவு (sill level) மற்றும் அவற்றின் தற்போதைய நிலை முதலியன விரிவான திட்ட அறிக்கையில் (DPR) பகுப்பாய்வு செய்யப்பட்டு முன்மொழியப்பட வேண்டும்.

ஏரியின் தளத்தில் ஆப்புகளைக் (standard pegs) கொண்டு கட்டங்கள் (grid point) அமைக்கப்பட வேண்டும். இதனை உதவி செயற்பொறியாளர் / செயற்பொறியாளர்(ஊ.வ) கள ஆய்வு மேற்கொள்ளும் வரை எவ்வித மாற்றமும் செய்யக் கூடாது. இவற்றை உதவிசெயற்பொறியாளர்(ஊ.வ) ரேண்டம் (Random) முறையே சரிப்பார்க்க வேண்டும். பின்பு, உதவிசெயற்பொறியாளர்(ஊ.வ) அவர்கள் தனது அதிகார வரம்பிலுள்ள அனைத்து சிறுநீர்ப்பாசன ஏரிகளில் எடுக்கப்பட்ட அனைத்து Pre-levels -யும் சரிபார்க்க வேண்டும்.

ஏரியின் முழுகொள்ளளவினை, மீட்டு எடுப்பதோடு, பயன்பாட்டிற்கு ஏதுவாக இருப்பு தண்ணீர் (Dead storage) அமைப்பினை கரையின்கீழ் பகுதியிலிருந்து (Toe) 10 மீட்டர் தொலைவில் இணையான அகழிகள் (parallel trenches) அமைக்கப்பட வேண்டும். அகழியின் நீளம், அகலம், உயரம் ஆகியவற்றை உதவி செயற்பொறியாளர்(ஊ.வ) மற்றும் செயற்பொறியாளர்(ஊ.வ)

Verified by RealEstate™

அவர்களின் ஆய்வின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும். எவ்வகையிலும் மண் வேலைக்கான(earth work) செலவினமானது சிறு நீர்ப்பாசனஏரி சீரமைப்பிற்கான மொத்த செலவினத்தில் 60% மிகாமல் இருக்க வேண்டும்.

சிறு நீர்ப்பாசன ஏரியின் மறுசீரமைப்பு விளிம்பு வரைப்படம் (contour mapping)முன்நிலைகளின் விவரங்கள், மண் வேலை கணக்கீட்டு புத்தகம் போன்றவை உதவி செயற் பொறியாளர் / பொறியாளர் (ஊ.வ) ஆகியோரால் முறையாக சான்றளிக்கப்பட்டு செயற்பொறியாளர் / திட்டஇயக்குநருக்கு சமர்பிக்கப்பட வேண்டும். கூடுதல் இயக்குநர் / தலைமைப் பொறியாளர் / கண்காணிப்பு பொறியாளர் சரிபார்ப்புகள் தோராயமாக சரிபார்க்கப்பட்டு. இவைகள், தேவைப்படும் வேலைகளுக்கு முடிந்த பின்னரே முன்மொழிவுகள் நிர்வாக அனுமதிக்காக மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும்.

மதிப்பீட்டில் பின்வரும் பகுதிகள் இருக்க வேண்டும்

a. சிறுநீர்ப்பாசன ஏரியின் முழுப்பகுதிக்கும் புதர் அகற்றுதல்.
b. விளிம்புநிலைகளின்(contour level) அடிப்படையில் ஏரியினை தூர்வாருதல்/ஆழப்படுத்துதல்.
c. நீர்வரத்து பகுதிகள் (Inlet sections), மதகுகள் (Sluice(s) மற்றும் கலங்கு வழிந்தோடி (weir) பழுதுபார்த்தல் அல்லது புனரமைத்தல்.
d. கரை(bund) அதன் உண்மை குறுக்கு வெட்டுக்கு மீட்டமைத்தல்.
e. தேவையின் அடிப்படையில் ஏரியின் கரை(bund) பாதுகாப்பு பணிகளுக்கான ஏற்பாடு செய்தல்,

நீர்வரத்து/நீர் வெளியேறும் கால்வாய்கள் (Inlet / Outlet channels) தூர்வாருதல் / ஆழப்படுத்துதல் தனித்தனியாக மேற்கொள்ளப்பட வேண்டும். தேவையான பணிகள் முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் முன் விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். யுகத்தின் அடிப்படையில் தோராயமான மதிப்பீடுகள் இருக்கக்கூடாது. விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வழிகாட்டு குறிப்புகளின்படி தகுந்த அதிகாரிகளால் சரிபார்த்த பின்னர் பணிகளின் முன்மொழிவுகள் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும்.பணியின் மதிப்பீடு, கள நிலவரத்தின் அடிப்படையிலும் துல்லியமாகவும் இருக்க வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும் சிறுநீர்ப்பாசனஏரியின் மறுசீரமைப்புக்கான மொத்த

Verified © RealEstate™

செலவினமானது ரூ.25.00 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். மேலும், பொருட் கூறுக்கான செலவினமானது மொத்த மதிப்பீடு தொகையில் 25% க்கும் குறைவாக இருக்க கூடாது.

சிறுநீர்ப்பாசன ஏரிவண்டல் மண் அகற்றுவதற்கான விரிவான திட்ட அறிக்கையில் இடம் பெற்றிருக்க வேண்டிய விவரங்கள் பின்வருமாறு:-

- விரிவான விவரக் குறிப்பு அறிக்கை/தொழில் நுட்ப குறிப்பு
- சிறு நீர்ப்பாசன ஏரி நீரியல் விவரங்கள் (Hydraulic)கொண்ட ஏரியின் நீரியல் விவரங்கள் தொகுப்பு (Tank Memoir)
- சோதனைக் குழி விவரங்கள்.
- புல வரைப்படம் (FMB)
- மதகுகள் (Sluice(s) மற்றும் கலுங்கு வழிந்தோடி (Weirs) வரைப்படம்
- ஏரிகரையின் குறுக்கு மற்றும் நீளவாக்கு வரைப்படம்
- முன்மொழியப்பட்டவேலை தளத்தின்முன் அளவீட்டு விவரங்கள் மற்றும் விளிம்பு வரைபடங்கள் (வண்ணம்) கட்டாயமாக மதிப்பீட்டின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.
- மண் வேலை கணக்கீடு தாள்.
- குறைக்கப்பட்ட நிலைகள் (reduced level) தேவைப்படும் இடங்களில் வழங்கப்பட வேண்டும்.
- முன்மொழியப்பட்ட பணி, கடந்த ஒரு வருடமாக எந்த அரசு திட்டத்தின் கீழும் செய்யப்படவில்லை என்பதைக் குறிப்பிடும் சான்று.
- மதிப்பீட்டில் எடுக்கப்பட்ட அனைத்து கூறுகளின் புகைப்படங்கள். நீர்வரத்து கால்வாய், நீர்வெளியேற்றும் கால்வாய் (Inlet channel, outlet channel) பணிதளம், கரை பலப்படுத்துதல் கல் பதிப்பு /கல் பதிப்பு இல்லாமல்
- விகிதபகுப்பாய்வு
    - விரிவான மதிப்பீடு
    - சுருக்க மதிப்பீடு

பணிகளை செயல்படுத்துதல்

1. நீர் பரப்பு பகுதியில் உள்ள செடிகள்/ புதர்கள் முற்றிலும் அகற்றப்பட்டு பணிதளத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். அடர்ந்தமரங்கள் இருக்குமாயின் அவை முற்றிலும் இயந்திரங்கள் கொண்டு அகற்றப்பட வேண்டும். கருவேலமரங்கள் இருக்குமாயின் முறையான ஏலம்விடப்பட்டு அதில் ஈட்டப்படும் நிதியானது ஊராட்சி ஒன்றியம் /கிராம ஊராட்சி கணக்குகளுக்கு அனுப்பப்பட வேண்டும்.

Verified RedEstate ™

2. களத்தில் வேலையினை தொடங்குவதற்கு முன்பாக நீரியல் தொகுப்பின்படி (memoir) வடிவமைப்பு நிலைகளுக்கேற்ப (Original levels) தோண்டப்பட வேண்டிய ஆழமானது நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.
3. மண் எடுக்கப்பட்ட ஆழத்தை சரிபார்த்து உறுதி செய்ய கரையின் இரு திசைகளிலும் Reference Bench marks வைக்கப்பட வேண்டும்.
4. Reference Bench marks நிறுவிய பிறகு மற்றும் மண் எடுக்கும் பணி தொடங்குவதற்கு தளத்தின் முன் அளவுகள் எடுத்து உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) மற்றும் செயற்பொறியாளர் (ஊ.வ) ஆகியோரிடமிருந்து தேவையான அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மண் எடுக்கப்பட்ட ஆழத்தை சரிபாக்க தண்டு முட்டுகள் (Deed Man) சரிபார்க்க சரியான இடைவெளியில் விடபடவேண்டும்.
6. இயந்திரங்களின் வேலை நேரபதிவு புத்தகம் பராமரிக்கப்பட்டு உதவி செயற்பொறியாளர் / செயற்பொறியாளர் / திட்ட இயக்குநர்/ மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை(ஊ.வ) மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் சமர்பிக்கப்பட வேண்டும்.
7. உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் (ஊ.வ) – யிடம் இருந்து மண் வேலை 50% முடிந்ததாக ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. ஏரிக்கு வெளியே மண்ணை எடுத்து செல்வது கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது. மீறினால் ஒழுங்கு நடவடிக்கைக்கு வழிவகுக்கும்.
9. ஏரிக்கரையில் மேல்நிலை மற்றும் கீழ்நிலையில் உள்ள புதர்கள், வேர்கள் போன்றவை முற்றிலும் அகற்றப்பட வேண்டும்.
10. மேலும், சிறு நீர்ப்பாசன ஏரியின் மற்றும் ஒரு சிறிய தீவு உருவாக்கப்பட்டு பறவைகளை கவரும் வகையில் பூர்விக மரங்கள் நடப்படவேண்டும்.
11. பழைய கரையின் மீது புதியதாக எடுக்கப்பட்ட மண்ணினை அமைக்கும் போது பிணைப்பு சரியாக இருக்குமாறு கரையில் (benching)செய்யப்பட வேண்டும். பொதுவாக bench –ன் அளவு 30 செ.மீX 30 செ.மீ அல்லது 45 செ.மீX 45 செ.மீ அல்லது அதற்கு அதிகமாக இருக்கவேண்டும்
12. கரையின் மேல் மண்நிரப்பும்போது, கூடுதலாக 30 செ.மீ அகலம் அல்லது அதற்கும் அதிகமாக வைக்க வேண்டும். இதற்கான கூடுதல் மண் எடுத்தல் , ஒழுங்குபடுத்துதல் போன்றவைகளை மதிப்பீட்டிலும் கொண்டு வர வேண்டும்.

Verified & Realistate

13. கரையின் மேல் அடுக்காக மண் நிரப்பப்பட்டு 95% வரை அழுத்தபடுவது செய்யப்பட வேண்டும். (Proctor density) கரையின் அகலத்திற்கு ஏற்றவாறு உருளைகள், அல்லது அதிர்வு உருளைகள், தகடு காம்பாக்டர்கள் போன்ற இயந்திரங்கள் பயன்படுத்தலாம்.
14. கரையின் பின்புறம் சரிவை பொருத்தமான புல் (turfing) அமைத்து கரையின் மண் அரிப்பை தடுத்து கரையை பாதுகாக்கலாம்.
15. மேல் அகலம் மற்றும் இரு பக்கசரிவுகள் மண்ணின் தன்மையையும், கரை உயரத்தில் அடிப்படையில் இருக்கவேண்டும். கரையின் குறுக்கு வெட்டு அளவீடு உள்ள தரவுகளின்படி இருக்க வேண்டும்.
16. கலிங்கு வழிந்தோடி (Surplus weir)body wall or downstream apron – களில் ஏதேனும் கசிவுகள் அல்லது சேதங்கள் உள்ளதா என சோதிக்கப்பட வேண்டும். (masonry) சுவரில் உள்ள Joint சுத்தம் செய்யப்பட்டு CM 1:3 mortar பயன்படுத்தி பூச்சு செய்யப்பட வேண்டும்.
17. சேதம் மோசமாக இருந்தால், அது புனரமைப்பதற்காக எடுத்துக் கொள்ளப்படலாம்.
18. கலிங்கு வழிந்தோடி (Surplus weir), Wing wall பழுதுபார்ப்பு அல்லது புனரமைப்புக்காகவும் எடுத்துக் கொள்ளப்படும்.
19. கசிவுகளை சரி செய்தல் அல்லது Plug & Rod மாற்றுதல் பணிகள் செய்யப்படலாம். ஒரு வேளை மதகு சேதமடைந்திருந்தால், புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளலாம்.
20. வேலைகள் தொடங்குவதற்கு முன்மற்றும் வேலைகள் முடிந்த பின் புகைப்படங்கள் எடுக்கப்படவேண்டும். எடுக்கப்படும் புகைப்படங்கள் வேலை நடப்பதை தெளிவாக காட்ட வேண்டும்.
21. தரக்கட்டுப்பாட்டுப் பதிவேடுகள் மற்றும் அனைத்து பரிந்துரைக்கப்பட்ட சோதனைகளும் பராமரிக்கப்பட வேண்டும்.

ப. செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

13-6-2023
பிரிவு அலுவலர்

13/6

இணைப்பு-III

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் - II (AGAMT – II) இன் கீழ் 2023-24 ஆண்டிற்கான சிமெண்ட் கான்கீரிட் நடைபாதை அமைப்பதற்கான வடிவமைப்பு அளவுகோல்கள்

1. மழைநீரானது வீடுகளுக்குள் புகாமலிருக்க சிமெண்ட் கான்கீரிட் நடைபாதையின் மேற்பரப்பு(Riding surface) வீடுகளின் தரைமட்ட அளவினை கருத்தில் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

2. நடைப்பாதையின் இருபுறமும் மழைநீர் தேங்குவதை தடுக்கவும், நடைப்பாதையின் விளிம்பு உடையாமல் பாதுகாக்கவும், பாதசாரிகள் மற்றும் இருசக்கர வாகன ஓட்டிகள் சறுக்கி விபத்துக்குள்ளாகாமல் தவிர்க்க சிமெண்ட் கான்கீரிட் நடைபாதையின் இருபுறமும் சரளை கற்கள் நிரப்பப்பட வேண்டும். மழைநீர் வடிகாலுக்காக Camber அமைக்கப்பட வேண்டும்.

3. நடைப்பாதையின் இருபுறமும் மழைநீர் தேங்குவதை தவிர்க்க குறுக்கு வடிகால் (Cross drainage) வசதி அமைக்கப்பட வேண்டும்.

4. நீர் தேங்காமல் தடுக்க, நடைப்பாதையின் குறுக்கே குழாய் (Dummy duct) தேவைக்கேற்ப அமைக்கப்பட வேண்டும்.

5. தார் அட்டைகள் கொண்டு 5 மீட்டருக்கு ஒரு இடத்தில் விரிவாக்க இடைவெளி (Expansion joints) விடப்படவேண்டும்.

ப. செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

13-6-2023
பிரிவு அலுவலர்

1316